Registered as a Newspaper பக்கங்கள் 10 விலை: ரூபா 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆடி 22 [ 06-08-1993 ] வெள்ளிக்கிழமை ஓசை 169

## விளையாட்டு உபகரணங்கள் கப்பலில் இருந்து மாயம்!

யாழ். செயலகத்திற்கு கப்பலில் எடுத்து வரப்பட்ட பெறுமதிமிக்க விளையாட்டு உபகரணங்கள் செயலகம் வந்துசேரவில்லையென மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா தெரிவித்தார். கொழும்பிலிருந்து கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட விளையாட்டு உபகரணங்களில் மிகவும் பெறுமதி வாய்ந்த உபகரணங்களே களவாடப்பட்டுள்ளன. அந்த உபகரணங்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றிய விபரம் தெரிய (10 ஆம் பக்கம் பார்க்க)

# உண்ணாவிரதத்தை கைவிடுக!

# ஹமில்டன் வனசிங்கா கோரிக்கை

## அரச தரப்புச் செய்தியுடன் அரச அதிபர் நாளை வருகிறார்

(யாழ்ப்பாணம்)

யாழ். அரச அதிபர் நாளை யாழ்ப்பாணம் வந்து சேரும் வரையில் உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு கூட்டுப்படைகள் நடவடிக்கை தலைமையகத் தளகர்த்தா ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா யுத்தக் கைதிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக கைதிகளுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் மூலமே இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் சில தினங்களாகத் தங்கியுள்ள அரச அதிபர் கைதிகள் விவகாரம் தொடர்பாக அரசாங்கத்துடன் கலந்தாலோசனை நடத்தியதாகத் தெரியவருகின்றது இது குறித்து அரச அதிபர் ஏற்கனவே அறிவித்திருந்தமை தெரிந்ததே. இதைத் தொடர்ந்தே தற்பொழுது ஹமில்டன் வனசிங்காவின் கோரிக்கை விடுக்கப்பட்டதாக அறியவருகின்றது.

இதேவேளை அரச அதிபர் நாளை யாழ்ப்பாணம் வந்து சேருவார் என எதிர்பார்க்கப்படுகிறது. அவர் கைதிகள் தொடர்பான அரசாங்கத் தரப்புச் செய்தியுடன் வருவார் எனவும் அறியவருகிறது.

இதனிடையே நேற்று கொழும்பில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் (10 ஆம் பக்கம் பார்க்க)

### ஹமில்டன் செய்தியையடுத்து

## போர்க் கைதிகள் நீர் அருந்த ஆரம்பித்தனர்

கூட்டுப்படைத் தளபதிஜெனரல் ஹமில்டன் வனசிங்காவின் செய்தி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக போர்க் கைதிகளுக்கு கிடைத்ததையடுத்து அவர்கள் நேற்று நீராகாரம் அருந்தினர். கடந்த58 மணி நேரங்களாக இவர்கள் நீர் அருந்தாது தமது உண்ணாவிரதத்தை தொடர்ந்தது தெரிந்ததே. போர்க்கைதிகள் நேற்று நீர் அருந்திய போதிலும் தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்துவருகின்றனர்.

நாளை சனிக்கிழமை யாழ். வரும் அரச அதிபர் தமது விடுதலை தொடர்பாக ஆக்கபூர்வமான ஒரு செய்தியுடன் வருவதாக கூட்டுப்படைத் தளபதி ஹமில்டன் தமக்கு அனுப்பிய செய்தியையடுத்தே தாம் நீராகாரம் அருந்தி உண்ணாவிரதப் போராட்டத்தை தொடர முடிவுசெய்ததாக போர்க்கைதிகளில் ஒருவர் நேற்று குறிப்பிட்டார்.

## கைதிகளுக்கான கடிதங்கள் அரசஅதிபர் எடுத்து வருவார்

(யாழ்ப்பாணம்)

யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் நேற்று முன்தினம் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் திரும்பியுள்ளார் என தெரிய வருகின்றது.

இவர் நாளை இங்கு வந்து சேருவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும் இவர் இங்கு சாகும் வரைஉண்ணாவிரதத்தைமேற்கொண்டுள்ள யுத்தக்கைதிகளிற்கான முக்கிய கடிதங்களுடன்வருகின்றார்எனமற்றுமொரு செய்தி தெரிவிக்கின்றது. (பா).(நி)

## உறவினர்களின் ஓலம் மரணத்தை நினைவுபடுத்தியது!

### போர்க் கைதிகள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நீராகாரமற்ற 53 மணிநேர உண்ணாவிரதப் போராட்டம் எம்மை மரணத்தின் விளிம்புக்கு கொண்டு சென்றது. உயிர் தப்புவோம்என்ற நம்பிக்கையை நாம் இழந்திருந்தோம். இவ்வாறு சாகும்வரை உண்ணாவிரத மிருக்கும் சிங்கள யுத்தக் கைதிகள் தெரிவித்தனர்.

தம்மை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கும்படி அரசிடம் கோரிக்கை விடுத்து எட்டாவது நாளாக நேற்று தமது போராட்டத்தை தொடர்ந்தனர். கடந்த செவ்வாய்க் கிழமை காலை 10.00 மணிமுதல் நேற்று நண்பகல் வரை நீராகாரம் எதுவுமின்றிய நிலையில் தமது போராட்டத்தை நடாத்தினர். இக் [ 9 ஆம் பக்கம் பார்க்க ]

## மேலும் 4 கைதிகள் ஆஸ்பத்திரியில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ள யுத்தக் கைதிகளில் மேலும் நால்வரின் உடல் நிலை நேற்று மோசமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சிசிர சாந்தலால் (25). எம். தர்மபால(34), கே. ஜெபதிலக் (31),சேனாரட்ன, ஆகியோரே வைத்தியசாலையில் அனுமதிக்கப் ட்டவர்களாவார்கள்.

[10 ஆம் பக்கம் பார்க்க]

கோப்பாய், உடுவில்

## வாகனப் பதிவுகள் 14 ஆம் திகதியுடன் முடிவு

கோப்பாய், உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட பகுதியில் மோட்டார் ஊர்திகளைப் பதிவு செய்யும் செயற்பாட்டின் மூன்றாம் கட்ட நடவடிக்கைகள் எதிர்வரும் 14ஆம் திகதியுடன் நிறுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே தமது ஊர்திகளைப் பதிவு செய்து கொள்ளாதவர் கள் உடன் அவற்றைப் பதிவு செய்யுமாறு மோட்டார் ஊர்தி பதிவுப் பகுதியினர் கேட்டுள்ளனர்.

## அதிகாரிகள் சென்ற சமயம் புலிகள் மீண்டும் தாக்குதல்

(கொழும்பு)

மணலாறு ஜனகபுர இராணுவ முகாம் தகர்க்கப்பட்ட சமபவம் தொடர்பாக விசாரணை செய்யவென மேஜர் ஜெனரல் ஜெரிசில்வா தலைமையிலான குழு மணலாறு சென்ற கடந்த வெள்ளி இரவு வெலிஓயா பொலிஸ் நிலையம் மீது விடுதலைப் புலிகள் மோட்டார் தாக்குதலை நடத்தினர் என கொழும்பில் கூட்டுப்படைத் தலைமையகம் தெரிவித்தது.

இதன் பின்னர் சனிக்கிழமை (10 ஆம் பக்கம் பார்க்க)

## தாண்டிக்குளத்தில் மேலும் மூவர் கைது

[வவுனியா]

ரொபிகள், சிறிய மின்குமிழ்கள் என்பவற்றை வடபகுதிக்கு தம்முடன் எடுத்து வந்த ஒருவர் தாண்டிக்குள இராணுவத்தினரால் தடுத்துவைக்கப்பட்டுள்ளார். நேற்று படையினரால் கைதான இவர் ஒட்டிசுட்டானைச் சேர்ந்த நடேஸ் என்பவர் எனத்தெரிய வருகிறது,

இதே சமயம் நேற்று தடை செய்யப்பட்ட பொருள்களுடன் வந்து தாண்டிக்குளம் படையினரால் கைதான மூவரை படையினர் ஒரு லொறியில் ஏற்றி மன்னார் (10 ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலி - பூநகரி படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்றும், நாளையும் வழமையான நேரத்திற்கு நடைபெறும் என யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

### கைதிகள் இறப்பின்

## செஞ்சிலுவை முன்பாக தீக்குளிப்போம்!

### பெற்றோர் அறிவிப்பு

(கொழும்பு)

தற்போது யாழ்ப்பாணத்தில் உண்ணா விரதம் இருந்து வரும் 33 போர்க் கைதுகளில் எவராயினும் உண்ணாவிரதத்தினால் உயிரிழக்க நேரிட்டால் கைதிகளின் பெற்றோர்கள் கொழும்பிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் முன்பாக தமது உயிரை மாய்த்துக் கொள்ளப் போவதாக அறிவித்துள்ளனர்.

உண்ணாவிரதிகள் எவரின் (10 ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலியில் காயமடைந்த இருவர் அநுராதபுரத்தில்

### கைதானவர்கள் தடுத்துவைப்பு

(யாழ்ப்பாணம்)

கிளாலிக் கடற்பரப்பில் கடந்த மாதம் 28 ஆம் திகதி அதிகாலை சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் காயமடைந்த இருவர் அநுராதபுரம் அரசினர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

செல்வரெட்ணம் தயானந்தம் (41 வயது), மூப்பனார் செல்வநாயகம் (46 வயது, புலோலி) ஆகியோரே மேற்படி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களாவர்.

(09 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### சலனம்

சென்னைபிலிம்சொஸைட்டி வெளியிடும் உலக சினிமா தரம் பற்றிய இருமாத சினிமா இதழ் கிடைக்குமிடம்: வசந்தம் புத்தக நிலையம், 405 அருச்சுனா வீதி யாழ்ப்பாணம். (5592)

### "நீமியா"

நீமியா உரம வேபபம் பிண்ணாக்கை ஆதாரமாக கொண்டது. மண்வளம் பெருக்கி பயிரைத் தாக்கும் பூச்சிகளை விரட்டி விளைச்சலைப பெருக்கிறது. கிலோ ரூபா 18/-. அண்ணா கோப்பிகடைகளிலும் கிடைக்கிறது "மில்க் வைற்" (சி-7125)

### காணாமல் போய்விட்டது

1-8-93 ஞாயிறு இரவு எம். எஸ் வஞ்சன் (No 10, இராசேந்திரா வீதி) என்பவருக்கு சொந்தமான வயது 6, கறுப்புப் பசு B. V., வயது 3. கறுப்பு நாம்பன் முகத்தில் வெள்ளைக்குறி 'ப', இரு கோடுகளும் உண்டு இவற்றைக கண்டவர்கள் மேலுள்ள விலாசதிற்கு தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (5626)

### சனி மாற்றம்

மகரம், கும்பம், மீனத்திற்கு 7½ச் சனி. விருச்சிகம், சிங்கம், இடபதற்கு கண்டச் சனி. மேடம், கன்னி, தனுராசியினர் அதிர்ஷ் சாலிகள். கடகம் 8ல், துலாம 5ல் மிதுனம் — பரவாயில்லை. உங்கள் எதிர்காலமறிய வேலணை சோதிடர் V A சிவராசா. 152B அரசடி றோட், கந்தர்மடம். (5627)

### தவறிவிட்டது

கி. தயானந்தன் (நெடுந்தீவு மேற்கு, நெடுந்தீவு) என்பவருடைய அடையாள அட்டை யாழ். இந்துக்கல்லூரிக்கும்—சட்டநாதர் கோவிலுககுமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து யாழ். இந்துக்கலலூரியில ஒப்படைக்கவும். (5629)

### எண்ஜோதிட விஞ்ஞானம

கைரேகை ஜோதிடம், திருமணப் பொருத்தங்கள், ஜெனனகால ஜாதகங்களின் நவீன ஜோதிட விஞ்ஞான ரீதியான கணிப்புகளுககும் நேரில் சந்திக்கலாம். 'சத்யா' Prof T சத்யதாஸன், (MECH E. Elec. E) இடிகுண்டருகாலமை, கட்டுடை. (5628)

### தயாரிப்பாளருக்கு அறிவுறுத்தல்

யாழ். மாவட்டத்திலே தயாரித்து சந்தைப்படுத்தப்படும் ஐஸ்கிறீம் மக்களுக்கு தீங்கினை விளைவிக்கக் கூடிய பல பொருள்களை உள்ளடக்கியிருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது இதனைத் தவிர்க்கும் முகமாக ஐஸ்கிறீம் தயாரிப்பாளர்களுக்கான கலந்துரையாடலொன்று அண்மையில் தொழில் துறை மேம்பாட்டு நிறுவனத்தில் நடாத்தப்பட்டது.

இதில் சக்கரின் (saccharin) பாவனை முற்றாகத தடை செய்தல்; காலாவதியான பால்மா, தடைசெய்யப்பட்ட சாயங்கள் முதலியன பயன்படுத்தக் கூடாது; தயாரிப்பு நிலையங்கள் சுகாதாரச் சட்டங்களுக்கமைய இருத்தல் வேண்டும் என்ற நடைமுறைகளை உடனடியாக அமுலுக்கு கொண்டு வருவதெனவும மீறுவோர் மீது தமிழீழ காவல்துறையினர் நடவடிக்கையை மேற்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## 10 கோடி ரூபா உதவி

(டில்லி)

விடுதலைப் புலிகள் அச்சுறுத்தலை சமாளிக்க தமிழ்நாடு பொலிசாரை நவீனமயமாக்க 10 கோடி ரூபாவை மாநில அரசுக்கு மத்திய அரசு வழங்கியுள்ளதாக உள்துறை பாதுகாப்பு அமைச்சர் ராஜேஷ் பைலட் நேற்று பாராளுமன்றத்தில் கூறினார்.

இது தவிர 500 ஏ. கே-47 துப்பாக்கிகளும் மாநிலபொலிசாருக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

## அகிலஇலங்கை பரஸ்பர சகாயநிதிச்சங்கம் [வரைவுள்ளது]

தபாற்கந்தோரடி – வட்டுக்கோட்டை

## பதவி வெற்றிடம்

### கணக்காளர்

மேற்காண் பதவிக்கு யாழ். மாவட்டத்தில் வசிப்பவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சம்பளத்திட்டம்:- 1500 — 2750 / 10X50—10X75

வயதெல்லை:- 20. 08. 93 அன்று 40 வயதிற்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.

**தகைமைகள்:**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் வர்த்தக பட்டதாரி தகைமை சான்றிதழ்

அல்லது

பட்டயக் கணக்காளர் பரீட்சையில் இடைநிலை தேர்வுச் சான்றிதழ்

அல்லது

C I. M A. பரீட்சையின் பகுதி IIஇல் சித்தியெய்திய சான்றிதழ்

அல்லது

இலங்கை தொழில்நுட்ப கல்லூரியில் கணக்கியல் டிப்ளோமா தேர்வில் சிததியெய்திய சான்றிதழ்

அல்லது

க. பொ. த. (உயர்தரம் கணக்கியல் உள்ளடக்கியதாக 2 பாடங்களில் திறமைச் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் வங்கியில் அல்லது நிறுவனமொன்றில் (கணக்கியல்துறையில்) இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவம்.

**விண்ணப்ப முடிவு திகதி: 20. 08. 1993**

விண்ணப்பங்கள் யாவும் சொந்தமாக தயாரிக்கப்பட்டு "பொது முகாமையாளர்" அகில இலங்கை பரஸ்பர சகாய நிதிச் சங்கம் வரைவுள்ளது, தபாற்கந்தோரடி, வட்டுக்கோட்டை" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பங்களுடன் தகைமை சான்றிதழ், பிறப்புச்சான்றிதழ், வதிவிடச் சான்றிதழின் புகைப்படப் பிரதிகள் இணைக் கப்பட வேண்டும். முடிவு திகதிக்கு பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும. சங்க நடைமுறைக்கேற்ப ரொக்கப்பிணை செலுத்த வேண்டும்.

1993. 08. 05 பொதுமுகாமையாளர்

(சி-7143)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆண்டுத் திவஷமும்

| தாயக மண்ணில் | | தாயக விடிவுக்காய் விண்ணில் |
|---|---|---|
| 07 – 03 – 1973 |  | 18 – 07 – 1992 |

### வீரவேங்கை மணிமுடி (குட்டி)

தெய்வீகநாதன் – தனபாலசிங்கம்

அன்புடையீர்!

எமது ஆருயிர்ப் புதல்வன் த. தெய்வீகநாதன் (மணிமுடி) அவர்களின் முதலாம் ஆண்டு நினைவும், ஆண்டுத் திவஷமும் 6-8-1993 வெள்ளி (இன்று) நண்பகல் எமதில்லத்தில நடைபெறவிருப்பதால், அத்தருணம் தாங்களுமதிற் கலந்து எமது மகனின் ஆத்ம ஈடேற்றத்திற்காகப் பிரார்த்தித்து மதியபோசன விருந்திலும் பங்குபற்றும்படி எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள், மற்றும் சகல போராளிச் சகோதரர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி.

இங்ஙனம்
ந. தனபாலசிங்கம்
குடும்பத்தினர்.

சங்கிலிக் கிணற்றடி ஒழுங்கை,
அல்லாரை தெற்கு.

(5615)

## நன்றி நவிலல்

மறைந்த எனது அன்புக் கணவர் சபாபதி வல்லிபுரநாதனின் (ஓய்வுபெற்ற பணிப்பாளர்–கட்டிடத் திணைக்களம்) மரணச் செய்தி கேட்டு எமது யாழ். இல்லத்திற்கு வந்து அனுதாபங்கள் கூறிச் சென்ற அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

Mrs. R Vallipuranathan
No. 50, Vandervert Place,
Dehiwala.

தகவல்:
திருமதி R. கணபதிப்பிள்ளை,
No. 51, அரசடி ஒழுங்கை,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். (5624)

## நினைவு கூருகின்றோம்...

## 1993-08-06

1984ஆம் ஆண்டு இதே தினத்தில் வவுனியாவில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட உணவக ஊழியர்களான 04 தமிழர்கள்.

1987ஆம் ஆண்டு திருமலைச் சந்தியில் தமிழீழ தேசியக் கொடியான புலிக்கொடியினை ஏற்றும்போது சிறிலங்கா ஊர்காவற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் பலியான நாட்டுப்பற்றாளரான-

**ஆறுமுகநாதன்** (— — —)

1988ஆம் ஆண்டு மணலாறு - நித்திக்குளத்தில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். விக்ரர்** (நேசராசா விக்ரோறியன் - கணேசபுரம். திருநகர் - கிளிநொச்சி)

**லெப். சோமேஸ்** (நடராசா காந்தகுமார் - பலாலிமத்தி வசாவிளான்-யாழ்)

1989ஆம் ஆண்டு கிளிநொச்சி 7-ம் வாய்க்கால் பகுதியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**வினோதன்** (செபஸ்தியாம்பிள்ளை சிறியோகராசா-கனகபுரம் - கிளிநொச்சி)

1990ஆம் ஆண்டு ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய-

**பரணி** (— — மீசாலை, சாவகச்சேரி - யாழ்)

ஆனையிறவில் எதிர்பாராதவிதமாக பொறிவெடியில் சிக்கியதில எமைப்பிரிந்த-

**பாலன்** (ஞானபாலன் ஆரியவன்சன் - எல்லையடி, கண்டி வீதி, உமையாள்புரம் - கிளிநொச்சி)

யாழ் - கோட்டையில் சிறிலங்கா விமானப்படையினரின் விமானத்தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**2–ம் லெப். பாருதி/கண்ணன்** (விஷ்ணுகாந்தி கருணாகரன் - மீசாலை தெற்கு, சாவகச்சேரி)

**சித்திரன்** (பரமானந்தம் ஜீவானந்தம் - சந்தைமேற்குவீதி, பருத்தித்துறை)

**பயஸ்** (— — —)

மட்டு - பெரியகல்லாறுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 29 தமிழிளைஞர்கள். முறக்கொட்டாஞ்சேனை முகாமிலிருந்து புலிபாய்ந்தகல் முகாமை நோக்கி நிகழ்ந்த எறிகணைத்தாக்குதலில கொல்லப்பட்ட தமிழ்பபொதுமகன். சந்தி வெளித்துறைப் பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழிளைஞன்

திருமலை - பாலையூற்றுப் பகுதியில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் கொல்லப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 03 தமிழர்கள்.

முல்லைத்தீவு - சிலாவத்தைப் பகுதியில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் கொல்லப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 03 தமிழர்கள்.

யாழ்-பலாலி முகாமிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலின் போது தெல்லிப்பழை துர்க்கைஅம்மன் ஆலய இடம்பெயர்ந்தோர் முகாமில் கொல்லப்பட்ட பெண்உட்பட 02 தமிழர்கள். கொக்குவில் புகையிரத நிலையத்தை அண்மித்த பகுதியில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் கொல்லப்பட்ட 02 தமிழர்கள்.

உலங்குவானூர்தியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் மீசாலையில் கொல்லப்பட்ட இளைஞன். திருநெலவேலி வளாகவீதியில் கொல்லப்பட்ட பொதுமகன் ஆகிய 02 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவ முகாம் காவலரண்மீது மேற்கொள்ளப்பட்ட அதிரடித்தாக்குதலின்போது வீரச்சாவெய்திய,

**லெப். பானு** (திருச்செல்வம் தெம்சிகுமார்-முல்லைத்தீவு)

**லெப். கீரன்** (சின்னத்தம்பி ரமேஸ்குமார்-குமுழமுனை -மணலாறு)

**கலைச்செல்வன்** ( ... ... ... ... )

**சங்கர்** ( ... ... ... ... )

ஆனையிறவில் முகாமிலிருந்து வெளியேறமுயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**சுதாகர்** (இராசதுரை சுகுமார்-வலலாய்-அச்சுவேலி)

**பூர்ணிமா** (வசந்தி பேரம்பலம்-கொழும்புத்துறை கிழக்கு -யாழ்)

1992ஆம் ஆண்டு பலாலி முகாமிலிருந்து சிறிலங்கா இராணுவம் ஏழாலை நோக்கி மேறகொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட பாடசாலை மாணவி.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-7141)

மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்

# உள்நாட்டுப் போர் வெடிக்கும் அபாயம்:

# கம்போடியாவின் துயர்கதை தொடர்கிறது

பாலகுமாரன்

உலகில் எத்தகைய மாற்றங்கள் நிகழ்ந்தாலும் - அமைதிக்காக எவ்வளவு முயற்சிகள் எடுக்கப்பட்டாலும் - விடிவை நோக்கி நகர முடியாத தென் ஆபிரிக்க கறுப்பின மக்கள் போல - மத்திய கிழக்கின் பாலத்தீன மக்கள் போல - வாடும் நிலையிலே உள்ள இன்னுமொரு மக்கள் தொகுதியாக கம்போடிய மக்கள் இன்றிருக்கிறார்கள். பல்லாண்டுகளாக தாய்லாந்தின் அகதி முகாம்களில் தங்கிய பின் அமைதி வரும் என்ற நம்பிக்கையில் தாயகம் திரும்பிய மக்கள் மீண்டும் இன்று கம்போடியாவிலே அகதி முகாம் வாழ்க்கையை தொடர வேண்டிய நிலை. நெல் விதைக்கப்பட்டது போல் பரவிக் கிடக்கும் நிலக் கண்ணிகளை ஐ. நா. முழுமையாக அகற்றாததின் காரணமாக மாதத்திற்கு சராசரி700 பேர் முடமாகும் அவலநிலை இன்று அங்கு நிலவுகின்றது. இதற்கிடையில் அமெரிக்காவினாலும், ஐ நா. விலும் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட இரு முடிவுகள் கம்போடிய மக்களின் துயர நிலைக்கு முற்றுப்புள்ளி இப்போதைக்கு இல்லை என்பதை தெளிவுபடுத்தி விட்டன. கடந்த 18 மாதத்திற்கு மேலாக தனது 22 ஆயிரம் ஆளணியினர் மூலமாக உன்ராக் (UNTAC) எனப்படும் கம்போடிய இடைக்கால நிருவாகத்திற்கு பொறுப்பாக செயற்பட்ட ஐ. நா செப்டம்பர்-அக்டோபர் மாதங்களுக்கிடையில் கம்போடியாவிலிருந்து விலகுவதற்கு முடிவு செய்து விட்டது அதே சமயம் அமெரிக்காவோ பெரும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டமை உடன்பாட்டை மீறி தேர்தலில் பங்குபற்றாமை காரணமாக பொல்பொட்டின் கைமர்ரூச் போராளிக் குழு கம்போடியாவின் புதிய சனநாயக அரசியலோ அல்லது இராணுவத்திலோ எவ்விதத்திலும் பங்குபற்றக் கூடாது எனறும், அவ்வாறு அவர்கள் சேர்க்கப்பட்டால் தனது கம்போடியாவிற்கான உதவிகள் யாவும் நிறுத்தப்படும் எனக் கடுமையாக எச்சரித்துள்ளது. இவ்விரண்டு முடிவுகளும் மீண்டும் கம்போடிய எதிர்காலததை கேள்விக்குறியாக்கி விட்டன.

ஏனெனில்அண்மையில்தான் கம்போடிய அமைதி பற்றி நம்பிக்கை முளை விட்டிருந்தது. உலகிலே இதுவரை என்றுமே மேற்கொள்ளாத ஒருபாரிய அமைதி முயற்சியை ஐ. நா. கம்போடியாவிலே மேற்கொண்டிருந்தது. மே மாத இறுதி வாக்கில்தான் அங்கு மிகப் புதுமையான தேர்தலொன்றை ஐ. நா. நடாத்தி முடித்திருந்தது. இரண்டுபில்லியன் (200கோடி) அமெரிக்க டாலர் செலவில் நடாத்தப்பட்ட இத் தேர்தலில் தானே வாக்காளர்களை பதிவு செய்து அடையாள அட்டை வழங்கி-வாக்குகளை எண்ணி - தேர்தல் முடிவினையும் அறிவித்திருந்தது. 120 பேரைக் கொண்ட நாடாளு மன்றத்திற்கான தேர்தலை நடாததி முடித்த பின், புதிய அரசியல் யாப்பொன்றை கம்போடியாவிற்கு உருவாக்க வேண்டும் என்பதே இலக்கு. ஆயினும் தேர்தல் முடிவுகள் எவருககும் அறுதிப் பெரும்பான்மையை அங்கு வழங்காததால், ஒரு வித குழப்ப நிலை அங்கு தோன்றியுள்ளது. கைமர்ரூச் அணியினர் தேர்தலுக்கு எதிர்ப்பு காட்டிய போதும் வாக்களிக்க தகைமை பெற்ற மக்களில் (42 இலட்சம் பேரில்) 80 வீதத்திற்கும் மேலாக வாக்களித்தனர். 17க்கும் மேற்பட்ட கட்சிகள் போட்டியிட்ட போதும் தற்போதைய கம்போடிய பிரதமர் கூன்சென் (Hunsen)னின் கம்போடிய மக்கள் கட்சிக்கும் இளவரசர் நரோத்தம் நணரிச்சின் (சிகானூக்கின் மூத்த மகன்) புன்சிபெக் (Funcipec) கட்சிக்கும் இடையே கடும் போட்டி நிலவியது. முன்னாள் பொதுவுடமைவாதிகளின் கம்போடிய மக்கள் கட்சியேவெற்றிபெறும் என்கிற எதிர்பார்ப்பிற்கு மாறாக புன்சிபெக் 58 இடங்களையும் (45.3 வீத வாக்குகளையும்) கம்போடிய மக்கள் கட்சி 51 இடங்களையும் (38 7 வீத வாக்குகளையும்) பெற்றுக்கொண்டன. இதைத் தொடர்ந்து பெரும் குழப்பங்களும், இழுபறிகளும் நிலவின. கடைசியில நரோத்தம் சிகானூக்கின் முயற்சியால் இருகட்சிகளும் இணைந்து ஒரு அரசை அமைப்பது என்றும், தேர்தலைப் புறக்கணித்த கைமர்ரூச் போராளி அணியோடு பேச்சுவார்த்தைகள் நடத்தி அவர்களையும் அரசிலும், இராணுவத்திலும் சேர்ப்பதென்றும் முடிவாகியது. இதன்படி கைமர்ரூச் அணித்தலைவர் கியு சம்பென் அண்மையில் மீண்டும் பினாம்பென் வந்து பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தார் இதுஒரு பெரும் திருப்பமாகவே கம்போடிய அரசியலில் கருதப்பட்டது. ஏனெனில் கருத்தொருமைப்பாடு என்பது கம்போடிய வரலாற்றிலேயே காணப்படாதது. கைமர் மொழியிலே இக் கருத்தைக் குறிக்கும் சொல்லே இல்லை எனப் பொதுவாகக் கூறப்படுவதுண்டு ஆயினும் யதார்த்த நிலைமைகள் பகைமை உணர்வுகளை மழுங்கடித்தன. ஏனென்றால் கம்போடியாவின் நிதி நிலையோ மிக மோசம் கம்போடிய அரசாங்க ஊழியர்களுக்கு - இராணுவத்தினருக்கு வேதனம் வழங்கவே பணம் இல்லை. நாட்டின் எல்லா கட்டமைப்புக்களும் சீரழிந்து விட்டன. நிருவாகமே இல்லை. எல்லாவற்றிற்கும் வெளிநாட்டு உதவி மிக அவசியம். எனவே இந்த நிர்ப்பந்தம் எல்லாத் தரப்பினரையும் சமரசத்திற்குத் தள்ளியது. அதைவிட கம்போடிய மக்கள் கட்சியை எவ்வளவு தான் இளவரசர் நணரிச் எதிர்த்தாலும் ஒன்றரை லட்சம் இராணுவம் அக் கட்சியின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்ற உண்மை ஒருபுறம். அதைவிட நாட்டின் 15வீத நிலப்பகுதியை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் கைமர்ரூச் அணியுடன் இணக்கத்திற்கு வராவிட்டால் மீண்டும் பெரும் உள் நாட்டுப் போர் மூளும் என்கிற பயம் மறுபுறம். இவை காரணமாக கம்போடியாவில் தற்காலிக அமைதி நிலவும் சூழல் தோன்றியது.

50 வருட கால அரசியல் அனுபவமுள்ள 70 வயதான நரோத்தம் சிகானூக் ஒரு விசித்திர மனிதர். அவரது நீண்ட கால வரலாறு எவருக்கும் திகைப்பையே ஊட்டும். ஆனால் இவரே இன்று கம்போடிய குழப்ப நிலைக்கு தீர்வு காணக்கூடிய- எல்லாத் தரப்பினராலும் ஏற்கப்படக் கூடிய ஒரு தலைவராக கருதப்படுகின்றார். கம்போடிய அரச பரம்பரையினரான இவர், பிரான்சு 1941ஆம் ஆண்டுகளில் கம்போடியாவை அடிமைப்படுத்திய போது வெறும் பொம்மை அரசாக செயற்பட்டவர். பின் 1970 களில் அமெரிக்க ஆதரவுடன் நடந்த சதிப்புரட்சியின்போது கைமர்ரூச்சின் உதவியால் உயிர் தப்பினார். பின் 1975 அளவில் பொல்பொட் அணியினர் பதவிக்கு வந்தபோது சிலகாலம் பெயரளவில் தலைமைப் பதவியை வகித்தார். பின் பொல்பொட் அணியோடும் முரண்பட்டார். அவர்களால் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார் 1978 இல் வியட்னாம் கம்போடியாவில் படையெடுத்த போது சீனா சென்று கைமர்ரூச்சின் உதவியோடு கம்போடிய-வியட்நாம் ஆதரவு அரசுக்கு எதிராகச் செயற்பட்டார். இன்று அவரால் உருவாக்கப்பட்ட புன்சிபெக் கடசியே வெற்றிபெறும் நிலையிலுள்ளது. இவரது குடும்பம் பெரியது. ஆறு தடவை மணம் முடித்தவர். பெரும்தொகை வாரிசுகள். இவரது குடும்ப வரலாறே கம்போடிய சிக்கலின் தன்மையை விளக்கும். இவரது சில புதல்வர்கள் கைமர் அணியினரால் கொல்லப்பட்டனர் ஒரு மகன் கைமர்ரூச் அணியோடு சேர்ந்துள்ளார். ஒரு மகனான நரோத்தம் சக்கரபோவ் கம்போடிய மக்கள் கட்சியில்உள்ளார் இன்னொரு மகனான நணரிச்புனசிபெக்கட்சித் தலைவர். இவ்விரண்டு மகன்களுக்கும் இடையே கடும் பகைமை இவ்வாறாக குடும்ப பிளவுகளையும், கம்போடியப் பிளவுகளையும் ஒருங்கே சமாளித்து வந்த இளவரசருக்கு இப்போதைய அமெரிக்க எச்சரிக்கை பெரும் தலையிடியாக மட்டுமன்றி பெருத்த சினத்தையும் ஊட்டியபோதும் வெளிநாட்டு உதவி இல்லாமல் எதுவுமே செய்ய முடியாது என்கின்ற தனது இயலாமையை ஒப்புக் கொண்டு கைமர்ரூச்சோடான தனது பேச்சுவார்த்தையை இவர் இவ்வாரம் முறித்துக் கொண்டார்.

அண்மைக்காலமாக மறந்திருந்த தனது மனிதாபிமானத்தை- கம்போடியாவில் 1975-1978ஆம் ஆண்டிற்கு இடையில் 10 இலட்சத்திற்கும் (சிலர் 15 இலட்சம் என்பர்) மேற்பட்ட கம்போடியரைப் படுகொலை செய்து கம்போடியாவைக் கொலைக்களமாக்கிய கைமர்ரூச் அணியினரை உலக அரங்கில் இருந்து ஒதுக்குவதன் மூலம் மீண்டும் வெளிப்படுத்த இன்று அமெரிக்கா முயலலாம். ஆனால் உலகம் ஞாபக மறதி உள்ளது அல்ல. இந்த அமெரிக்கா அன்று கம்போடியாவில் நிகழ்த்திய அழிவுகள்- சோவியத் வியட்நாம் முகாமிற்கு எதிராக கைமர் அணியை வளர்த்த விதம்- அமெரிக்க சுயரூபத்தை தெளிவாக்கும். அமைதியாக நடுநிலை பேணிய கம்போடியா மீது தனது இராட்சத B-52 விமானங்கள் தொன் கணக்கில் குண்டு மாரி பொழிந்து கம்போடிய மக்களைக் கொன்றொழித்ததை யாரும் மறந்துவிட முடியுமா என்ன? அமெரிக்காவின் இந்த அட்டூழியங்களை சாட்டாக வைத்தே பொது உடைமை வேடம் பூண்டு பொல்பொட் 1975 அளவில் பதவிக்கு வர முடிந்தது. பொல்பொட்டை ஆதரித்த வியட்னாம் இவர்களது அட்டகாசம் தாங்க முடியாமல் 1978ஆம் ஆண்டில் படையெடுத்த போது அமெரிக்க மனிதாபிமானம் வேறொரு முகததைக் காட்டியது.

வியட்னாம் படையெடுப்பின் பின்னர், கைமர்ரூச் பக்கம் அமெரிக்கஆதரவுபொங்கி வழிந்தது. பொல்பொட் அணியினரை தென் தாய்லாந்தில் இராணுவ பாதுகாப்போடு தங்க வைத்து சீனாவுக்கு அறிவுறுத்தல்கள் கொடுத்து வியட்னாமோடு மோதவைத்து -பொல்பொட் அணிக்கு மிகத் தாரமான ஆயுத உதவிகள் செய்து மீண்டும் கைமர் ரூச் அணிக்கு புத்துயிர் ஊட்டியதும் இதே அமெரிக்கா தான். அதுமட்டுமன்றி 1981-ம்ஆண்டளவில் இளவரசர் சிகானூக் தலைமையில் மூன்று போராளிக் குழுக்களை ஒன்றாக்கி கம்போடிய விடுதலை முன்னணி என அணிஒன்றை உருவாக்கி பொல்பொட்டின் கொலை வெறித் தோற்றத்திற்கு சனநாயகம், விடுதலை எனப் பூச்சுப் பூசவும் அமெரிக்காவே பிரதான காரணம். பின்னர் பனிப்போர் நெருக்கடிகள் தளர்வடைய-1989-ம் ஆண்டளவில் வியட்னாமியர் வெளியேறினர் இதைக் தொடர்ந்து தலையீடுகளை நிறுத்தி ஐ. நா. விற்கு ஊடாக ஆசியான் நாடுகள், சீனா, அவுத்திரேலியா, பிரான்சு போன்ற நாடுகளை முன்னிறுத்தி சனநாயக கம்போடியாவை உருவாக்க எடுத்த முயற்சிகளிலும் அமெரிக்கா கணிசமான பங்காற்றியது. இதன் விளைவாக 1991-ம் ஆண்டு பாரிஸ் உடன்பாட்டில் கைச்சாத்திட்டதன் மூலம் மீண்டும் உலக அரசியல் அங்கீகாரத்தை கைமர்ரூச் அணியினர் பெற்றுக்கொண்டனர். அதுமட்டுமன்றி ஐ. நா. வின் மனித உரிமை ஆணைக்குழு கைமர் அணி மீது குற்றம் சாட்டிய இனப் படுகொலை குற்றச்சாட்டிலிருந்து இவர்கள் விடுவிக்கப்பட்ட அதிசயமும் நடந்தது.

இன்று நடப்பது என்ன? கைமர்ரூச் அணியினரே உடன்பாட்டின் படி தேர்தலில் பங்குபற்றவும் இல்லை ஒரு ஆயுதத்தை தானும் ஐ. நாவிடம் ஒப்படைக்கவுமில்லை. தனது பழைய நண்பர்கள் தன்னைக் கைவிடுவர் என்பதை உணர்ந்திருந்த இவர்கள் அமைதி நிலவிய இவ் இடைப்பட்ட காலத்தில் தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளை விரிவாக்கி அங்கு ஒரு சீரான நிருவாக முறையை உருவாக்கி (முழுக் கம்போடியாவிலும் கூட இவர்கள் பகுதியிலேயே ஒழுங்கான நிருவாகம் இருப்பதாகக் கூறப்படுகின்றது). தாய்லாந்து இராணுவத்தோடு கூட்டுச் சேர்ந்து ஐ நா. வின் பொருளாதாரத் தடையையும் மீறி பாரிய இரத்தினக்கல், மர வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது. இடைக்கிடை ஐ.நா. படைகளை சீண்டி இதுவரை எட்டுப்பேரைக் கொன்று விட்டது. அதே சமயம் புற உலக அழுத்தத்தை உணர்ந்து கம்போடிய மக்கள் மனநிலையையும் புரிந்து புதிய கம்போடிய அரசோடு நல்லுறவைப் பேணும் இராசதந்திர முயற்சியிலும் ஈடுபட்டு தனது அரசியல் விவேகத்தையும், வெளிக் காட்டியது. ஆனால் பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து நடாத்த அமெரிக்கா தடைவிதித்ததால் மீண்டும் அங்கே மோதல்கள் இவ்வாரம் ஆரம்பித்து விட்டன.

தற்போதைய நிலையில் தனது கட்டுப்பாட்டு பகுதிகளை வைத்துக் கொண்டு ஐ. நா. படை வெளியேறத் தொடங்கியதை சாதகமாக வைத்து கைமர் அணி தனது தாக்குதல்களை மேலும் அதிகரிக்கும் என்று நம்பப்படுகின்றது. எனவே இத்தகைய நிலையில் மீண்டும் ஒரு உள்நாட்டுப் போருக்கு முதலீடு செய்ய நாடுகள் முன்வருமா? சிகானூக் என்ன செய்யப் போகிறார்? எவ்வாறு இனி கம்போடிய அமைதி ஏற்படும்? இவையெல்லாம் இப்போதைக்கு வினாக்களாகவே இருக்கும். ஆனால் 25 வருடங்களுக்கு மேலாக துயரிலே ஆழ்ந்திருக்கும் கம்போடிய மக்களுக்கு இப்போதைக்கு விடிவு இல்லை என்பதும் கம்போடியர் துயரம் என்பதே ஒரு தொடர்கதை தான் என்பது மட்டும் உறுதியாக தெரிகின்றது.

## கைரேகைக்குப் பதில் விழித்திரை நாளங்கள்

### மோசடியை தவிர்க்க புதிய வழி

கைரேகையைப் போலவே மனிதனின் விழித்திரைகளில் ஓடும் இரத்த நாளங்களின் அமைப்பும் ஒருவருக்கொருவர் வேறுபட்டிருக்கின்றன. வங்கி வாடிக்கையாளர்களின் கணக்குகளிலிருந்து மோசடிப் பேர்வழிகள் ஆள் மாறாட்டம் செய்து பணத்தை எடுத்துவிடாமல் இருக்க விழித்திரைகளின் பிரத்தியோக அமைப்பு பயன்படுத்தப்படப்போகிறது.

அமெரிக்க நிறுவனம் கண்டுபிடித்திருக்கும் புதிய இயந்திரம், பணம் எடுக்கவரும் வாடிக்கையாளர்களின் விழித்திரையை படம் எடுத்து ஒப்பிட்டு அடையாளம் கண்டுகொண்ட பிறகே அவர் கம்பியூட்டர் மூலமாகத் தன்கணக்கிலிருந்து பணம் எடுக்க அனுமதிக்கிறது. இறந்துபோனவர்களின் விழித்திரைகளைக் காட்டிப் பணம் எடுக்க யாராவது முற்பட்டாலும், இரத்த ஓட்ட நிறுத்தத்தை வைத்து இயந்திரம் மேற்கொண்டு வழிவிடாதாம். சிலகாலத்திற்கு முன் ஜெனிவாவில் நடந்த பொருட்காட்சியில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த இயந்திரத்திற்கு மேல் நாடுகளில் ஏகப்பட்ட வரவேற்பாம்.

# சாயிபாபா கொலை முயற்சி; இரண்டு மாதமாகியும் துலங்காத மர்மம்!

சத்யசாயிபாபாவின் எழில் மிகு புட்டபர்த்தியில் ஆறு கொலைகள் இடம் பெற்று இரண்டு மாதமாகியும் அவை பற்றிய மர்மம் துலங்காமலே உள்ளது. இக்கொலைகள் குறித்து சத்திய சாயிபாபா தொடர்ந்து கடைப்பிடித்து வரும் மௌனமும் மேலிட அழுத்தங்கள் காரணமாக பொலிஸார் மீது விசாரணைகளை மட்டுப்பத்திக் கொண்டமையும் இக்கொலைகள் பற்றிய மர்மம் வெளிவராமலே அமுக்கப்பட்டு விடுமோ என்ற கேள்விஎழும்பியுள்ளது.

ஒருபுறம் நிலைமை இவ்வாறு இருக்க, இக் கொலைகளுக்கான பின்னணி பற்றியபல சந்தேகங்களும் ஊகங்களும் எழுந்தவண்ணமே உள்ளன. இக் கொலைகளுக்கான காரணம் ஆச்சிரமத்தில் ஏற்பட்ட பதவிப்போட்டியா? அன்றி சத்திய சாயிபாபாவின் சொத்துக்களுக்கு அடுத்த வாரிசு யார் என்பதற்கான போட்டியா? அன்றி சத்தியசாயிபாபாவிற்கு எதிரான வட இந்தியாவில் இருக்கும் அமைப்புகளின் சதி நடவடிக்கையா என்பது தொடர்பான கேள்விகள் எழுந்தவண்ணமுள்ளன.

## கொலை; கொலை முயற்சி

கடந்த ஜூன் 6ஆம்திகதி இரவு 10.30 மணியளவில் சாயிபாபா துயிலும் பிரசாந்தி நிலையத்திற்குள் பிரவேசித்த நால்வர்அவரதுபடுக்கை அறைக்குள் புகமுற்பட்டபோது அங்கிருந்தஅவரதுசெயலரான இராதாக்கிருஷ்ணன் மற்றும் அக்கல்லூரியில் வேலை செய்யும் மகாஜன் என்ற பேராசிரியர் ஆகியோர் இவர்களை இடைமறித்தனர் இவர்கள் நால்வரும் பாபாவிற்கு தந்தி ஒன்று வந்துள்ளது. அதனை அவசரம் அவரிடம் நேரில் ஒப்படைக்கவேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்,

இதன்போது இவர்கள் அறுவருக்குமிடையில் வாய்த்தகராறு ஏற்பட்டதாலும் அது முற்றிக் கைகலப்பாக மாறி இறுதியில் இக்கைகலப்பு கத்திக் குத்தில் முடிவடைந்தது. கொலையாளிகள் தாம் மறைத்து வைத்திருந்த கத்தியை உருவி இவர்களது உடல்களைப் பதம்பார்த்தனர். இதன்போது எழுந்தஅபயக் குரல் கேட்டு அங்கிருந்த சமையற்காரரான விஷ்ணு மாணவர் அனில் ஆகியோர் சம்பவ இடத்திற்கு ஓடிவந்தபோது கொலையாளிகள் அவர்களையும் கத்தியால்குத்திவிட்டு பாபாவின் அறையை நோக்கி முன்னேறினர்.

இதன்போது படுக்கையிலிருந்து வெளியே வந்த பாபா நிலைமையை உணர்ந்தவராக அறைக்குள் திரும்பி விட்டார். இதனைத் தொடர்ந்து அங்கு நடைபெற்ற அனைத்து சம்பவங்களுமே மர்மமாகவுள்ளது. ஒன்றுக்குப்பின் ஒன்றாக முரணான தகவல்கள் இன்றுவரை வெளிவந்து கொண்டிருக்கின்றன.

பாபா கதவைத் தாழிட்டு கொண்டதும் அங்கு அபாயச் சங்கு ஒலித்தது. பிரசாந்தி நிலையத்தைச் சூழவுள்ள பகுதிகள் எங்கும் ஒளி பாய்ச்சப்பட்டது. இப்படி ஓர் அமைப்பு அங்கு உள்ளமை எவருக்குமே அந்த நிமிடம் வரை தெரியாது எனவும் பேசப்படுகிறது. ஏனெனில் இதுவரை காலமும் அங்கிருந்த எவரும் இந்த அபாய ஒலியை கேட்டதில்லையாம். இந்த அபாய ஒலி பாபாவால் ஒலிக்கச் செய்யப்பட்டிருக்கலாம் என நம்பப் படுகிறது.

## பொலிசார் வந்தது எப்படி?

சாயிபாபாவின் மாளிகைக்கு பொலிசார் எப்படி வந்தார்கள் என்பது குறித்தும் பல முரண்பட்ட தகவல்கள் வெளி வந்துள்ளன.

பிரசாந்தி நிலையத்தில் பொருத்தப்பட்டிருந்த அபாய ஒலி அருகிலிருந்த பொலிஸ் நிலையத்திலும் பொருத்தப்பட்டிருந்ததாகவும் பாபா அதனை ஒலிக்கச் செய்த போது அது பொலிஸ் நிலையத்திலும் ஒலித்ததாகவும் அதனைத் தொடர்ந்து பொலிசார் பிரசாந்தி நிலையத்தை முற்றுகையிட்டதாகவும் ஒரு செய்தி கூறுகின்றது.

இதே வேளை சாயிபாபா தம்பியான ஜானகிராமையா தான் போன் செய்து பொலிசாரை வரவழைத்ததாக முதலில் தெரிவித்தார். பின்னர் "அதே ஜானகிராமையா நானே பொலிஸ் நிலையத்திற்குப் போய் பொலிசை அழைத்து வந்தேன்" என முரண்பட்ட தகவலை வெளியிட்டார்.

இன்ஸ்பெக்டர் கங்காதரன் தான்பொலிஸ்படையுடன்அங்குவந்தவர். அவர், சாயி பாபா கொலை... கொலை என்று கூச்சல் போட்டவாறு ஊர்மக்கள் ஓடினார்கள். உடனே நான் பொலிசாரை அழைத்துக் கொண்டு சாயிபாபா மாளிகைக்குப் போனேன் என்றார். வாய்ச்சண்டை முற்றி இருவர் கொலை செய்யப்பட, அதைப்பார்த்தஒரு சிறுவன் "கொலை... கொலை..." என்று கூச்சல் போட சாயி பாபாதான் கொலை செய்யப்பட்டு விட்டார் என்று நினைத்து ஊரே திரண்டு வந்து விட்டது. இது பின்னர் இன்ஸ்பெக்டர் கெங்காதரன் கூறிய கருத்தாகும்.

## கொல்ல முயன்றது யார்?

பாபாவைக் கொலைசெய்ய முயன்றவர்களில்ஒருவர்சுரேஸ் பிரபு. அன்று இரவு காவலுக்கு இருந்தவர். இவருக்கு திருமணமாகி மூன்று குழந்தைகளும் உண்டு. இவர் குடும்பத்துடன் அங்கேயே வாழ்ந்து வந்துள்ளார். மற்றவர் ஜெகநாதன். சாயிபாபா மாளிகைக்குத் தேவையான உபகரணங்கள்வாங்குபவர். மூன்றாமவர் சுரேஸ்குமார் மலேசியாக்காரரான இவர் சிலகாலங்களுக்கு முன்பு வரை பாபாவின் செயலாளராக இருந்தவர். மற்றவர் சாயிராம். சாயிபாபாவின் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த மாணவன். இவர்கள் நால்வருமே இருவரைக் கொன்றுவிட்டு பாபாவின் அறையை நெருங்கிக் கொண்டிருந்தவர்கள்.

அபாய ஒலி கேட்டு அங்கிருந்த சாயிபக்தர்களும் பொது மக்களும் பிரஸ்தாப இடத்தைச் சுற்றி வளைத்துக் கொண்டதால் தப்பித்துப் போக முடியாமல் பாபாவின் படுக்கை அறையில் இந்த நால்வரும் பதுங்கியிருந்த வேளை அங்கு வந்த பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர் என சொல்லப்படுகிறது.

பொலிசார் இதுபற்றி தெரிவிக்கையில் பாபாவின் படுக்கை அறையை தாம் முற்றுகையிட்டபோது இவர்கள் கத்திகள் சகிதம் தம்மை நோக்கி பாய்ந்து வந்தபோது தாம் இவர்களைச் சுட்டுக்கொன்றதாகக் கூறியுள்ளனர். இவர்கள்கையில் சாதாரணபேனாக் கத்திகள் தான் இருந்தன. புட்டபர்த்தியைச் சூழ மூன்று வாயில்கள் மட்டுமே உண்டு என்பதும் இவற்றை மூடிவிட்டால் அங்கிருந்து எவரும் தப்பிச் செல்ல முடியாது என்பதும் பொலிசாருக்கு நன்கு தெரியும். இருந்தும் பொலிசார் இவர்களைப் பிடிக்க முயற்சிக்காமல் சுட்டுக்கொன்றது ஏன் என்ற கேள்விக்கு இதுவரை பொலிசார் பதிலளிக்கவில்லை. சாயிபாபாவின் மாளிகைக்கு பொலிசார் இருமுறை வந்தார்கள் என நேரில் பார்த்தவர்கள் கூறுகின்றனர். முதல் முறை வந்து அமைதிப் படுத்திவிட்டுப் போனவர்கள் மறுமுறை வந்து நால்வரையும்சுட்டுக் கொன்றார்கள் என்றும் கூறப்படுகிறது.

**தொகுப்பு: சசீகரன்**

## வெடிப்பொருள்கள்

கொலையாளிகள் தங்கி இருந்த அறையில் 500 கிராம் எடையுள்ள சயனைற் போத்தல்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

அத்துடன் ஆச்சிரம வளாகத்தில் உள்ள வேலைவாய்ப்பு பயிற்சி நிலையத்தில்மறைத்து வைக்கப்பட்டிருந்த மூன்று கண்ணி வெடிகளைப் பொலிசார் கண்டுபிடித்துள்ளனர்.

இவை புட்டபர்த்தியில் பாரிய அழிவுகளை ஏற்படுத்தும் நோக்கத்துடன் நீண்ட காலமாக அதுவும் மிகவும் நுட்பமான முறையில் நன்குதிட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட சதித்திட்டம் என்பது நன்கு புலப்படுகிறது. தினமும் புட்டபர்த்திக்கு பாபாவைத் தரிசிக்க ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருவது வழக்கம். இவர்களில் பெரும் பெரும் அரசியல் தலைவர்கள், கல்விமான்கள் எனப் பலதரப்பட்டோரும் அடங்குகின்றனர். மிகக்கூடுதலான பக்தர்கள் அங்கு குழுமும் நேரம் இவை வெடிக்க வைக்கப்படுவதற்காக தயார் படுத்தப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. சயனைற் அங்கு உணவுகளிலோ, நீர்ற்குள்ளோ கலக்கத் திட்டமிடப்பட்டிருக்கலாம்.

இதேவேளை யூன் 3-ம் திகதியே பாபா கொல்லப்பட்டிருப்பார். அதிர்ஷ்டவசமாக தப்பித்துக் கொண்டார் எனவும் தெரிவிக்கப் படுகிறது. அன்றையதினம் இவர் பெங்களூர் பயணமாக இருந்ததாகவும,இதை அறிந்த கொலையாளிகள் முன்கூட்டியே அங்கு சென்றிருந்ததாகவும் கூறப்படுகிறது. திடீரென பாபா தனது பயணத்தை இறுதிநேரத்தில் ரத்துச் செய்துகொண்டதால்கொலையாளிகளின் திட்டம் தோல்வியடைந்து விட்டதாக ஒரு செய்தி வெளிவந்துள்ளது.

இவ்வாறெல்லாம் பாபாவையும் அவரது பக்தர்களையும் படுகொலை செய்வதற்கு திரைமறைவில் பல திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அதற்கு போதிய ஆதாரங்கள் அங்கிருந்து கிடைத்துள்ளன. அங்கேயே பாபாவை கொலை செய்யும் முயற்சியில் ஆறு பேர் கொல்லப்பட்டும் இருவர் படுகாயமடைந்தும் உள்ளனர்.

இவை அனைத்தும் நடைபெற்று இவ்வளவு நாட்களாகியும் பாபா இதுபற்றி எது வித தகவலையும் வெளிவிடாது இருப்பது பெரும் மர்மமாக உள்ளது.

புட்டபர்த்தியில் இடம் பெற்ற கொலைகள், கொலை முயற்சிகள் தொடர்பான தகவல்கள் ஆரம்பம் முதலே மர்மமாகவே உள்ளன. இக்கொலைகள் குறித்த முதல் தகவல்கள் உலகிற்கு வெளிவரவே சுமார் 12 மணிநேரம் எடுத்தது. இதேபோன்று கொலைகள் நடந்து சுமார் இரண்டு மாதமாகியும் கொலை குறித்த தகவல்கள் பல மர்மமாகவே உள்ளன.

இக்கொலைகள் இடம் பெற்ற வேளையில் புட்டபர்த்தியில் 500 பக்தர்கள் இருந்ததோடு அங்கு இரவு பகலாக தங்கி பாபாவிற்குச் சேவை செய்யும் பக்தர்கள் பலரும் இருந்தனர். ஆனால், இன்று வரை அவர்கள் எவரும் விசாரிக்கப்பட்டதாகவோ அன்றி பொலிஸார் இது குறித்து அக்கறை காட்டுவதாகவோ இல்லை.

இதுபற்றி சாயிபாபா அறக்கட்டளைத் தலைமை பொறுப்பாளர் இந்துலால்ஷாவிடம் நிருபர்கள் வினவியபோது அவர் எதையுமே கூற மறுத்துள்ளார். "இது முழுக்க முழுக்க எங்கள் பிரச்சினை. இது பற்றி வேறு யாரும் விசாரிப்பதை நாங்கள்விரும்பவில்லை' எனக் கூறிவிட்டு நழுவியுள்ளார்.

## விசாரணை நடத்துக

பாபாவைக் கொலை செய்ய முயன்றபோது பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்டவர் என கருதப்படும் ஜெகநாதனின் பெற்றோர் "எங்கள் மகன் பாபாவைக் கொலை செய்ய முயற்சித்திருக்கமாட்டான். ஆகவே பொலிஸ் துப்பாக்கிச்சூடு குறித்து உடனடியாக விசாரணை நடாத்த வேண்டும்" எனக்கோரிக்கை விடுத்துள்ளனர். ஜெகநாதனின் சகோதரர் கோதண்டராம் பொலிசார் மீது குற்றம் சாட்டினார். அவர் "ஞாயிறு இரவு எனது சகோதரர் சுட்டுக் கொல்லப்பட்டது குறித்து செவ்வாய்க்கிழமைதான் எங்களுக்குத்தெரியவந்தது பொலிசார் சரியான தகவல் கொடுக்கவில்லை. அன்றுமாலை நாம் அங்கு வருவதற்குள் என்சகோதரர் உட்பட மூன்று பேரின் உடல்களையும் பொலிசார் தகனம் செய்து விட்டனர். சடலங்கள்தான் கிடைக்கவில்லை பிரேதபரிசோதனை மற்றும் இறப்பு சான்றிதழ்களையாவது தருங்கள் எனக் கேட்டபோது அது பின்னர் வழங்கப்படும் என்று கூறிவிட்டனர்" எனதெரிவித்துள்ளார்.

சாயிராமின் தந்தை கூறியதாவது,'என்மகன் பாபாவுக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டவன் நான் 23ஆண்டுகளாக பாபாவின் பக்தனாக இருக்கிறேன் எனது மகன் இதை ஒருபோதும் செய்திருக்கமாட்டான், பாரபட்சமற்ற முறையில் விசாரணை நடத்தி இந்தச் சதியில் உள்ள உண்மைகளைவெளிக்கொண்டுவர வேண்டும்' என்கிறார்.

பிரசாந்தி நிலையம் பற்றிய பல உண்மைகளை வெளியிட தான் தயாராக இருப்பதாக போயாபதிரவீந்திரபாபு என்பவர் ஈநாடு பத்திரிகைக்கு கடிதம்மூலம் தெரிவித்துள்ளார். பிரசாந்தி நிலையத்தில் நடைபெற்ற கொலைகளின் போது அங்கிருந்து தப்பிதலைமறைவான இவரும் இவருடன் தப்பிய விஜய் பிரபு ஆகிய இருவரும் பொலிசாரால் தேடப்படுபவர்களாவர். இவர்கள் இருவரும் புட்டபர்த்தியில் தங்கியிருந்த அறையிலிருந்தே கண்ணிவெடிகளைப்பொலிசார் கண்டுபிடித்தார்கள்.

பிரசாந்தி நிலையத்தில் பல அட்டூழியங்கள் நடக்கின்றன இவை பாபாவிற்கு தெரியும் சில நாட்களுக்குள் பிரசாந்தி நிலையத்தில் மேலுமொரு கொலை நடக்கவுள்ளது.எனக்கு பூரண பாதுகாப்பு வழங்கப்படும் என உரியவர்கள் உறுதியளிக்கும்பட்சத்தில் நான் சரணடைந்து இவற்றை வெளியிடதயாராகவுள்ளேன்" என அவர் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இவர்கள் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளபோதிலும் பாபா மௌனம் சாதிப்பது ஏன்? இதேவேளை பாபா பொலிஸ் உயரதிகாரிகளிடம் "எனக்கு யாரும் எதிரிகள் இல்லை. என்னைக் கொலை செய்ய அவர்கள் வரவில்லை அவர்கள் என்னுடைய பக்தர்கள் எனக்கு எவராலும் ஆபத்து ஏதும் இல்லை எனது பக்தர்களுக்குள் ஏற்பட்ட பதவிப்பிரச்சினையே இந்த விபரீதங்களுக்குக்காரணம்" என கூறியுள்ளார்.

இதே பாபா மற்றோரிடத்தில் "நிதியத்தின் எந்தவோர் உறுப்பினருமே என்னிடம் அதிகாரத்துக்காகவோ அந்தஸ்துக் காகவோ வரவில்லை அவர்கள் பிரசாந்தி நிலையத்தில் தூய்மையான அன்பை வழங்குவதற்காக மாத்திரமே இருக்கிறார்கள்" என தெரிவித்திருந்தார். யூலை3-ம் திகதி பூர்ணசந்திர கேட்போர்கூடத்தில் பாபா பெருந்திரளான பக்தர்கள் முன்னிலையில் "இங்கு நடந்த சம்பவங்கள் குறித்து பலதரப்பட்ட கருத்துக்கள் வெளிவருகின்றன. இவை வெறும் கற்பனையே. இதில்உண்மை எதுவுமில்லை. எனதுஅமைப்புக்களால் மேற்கொள்ளப்படும் பணிகளில் பொறாமை கொண்டவர்களே இதனைச் செய்தனர். நான் பிரதிநிதித்துவப்படுத்தும் உலகளாவிய ஆன்மீக சாம்ராஜ்யத்தை நிலை குலைக்கும் நோக்குடனேயே இச்சம்வம் இடம்பெற்றதாக வாதங்கள் முன்வைக்கப்படுகின்றன" எனக் கூறியுள்ளார்.

## கொலை முயற்சியின் பின்னணியில்

இந்தக் கொலைகளுக்கு உண்மையானகாரணம் சொத்துத் தகராறு எனக் கூறப்படுகிறது. சாயி பாபா அறக்கட்டளைக்கு உலகம் முழுக்க 120 நாடுகளில் சொத்துக்கள் இருக்கின்றன. வெளிநாட்டு வங்கிகளில் கோடி கோடியாகப் பணம் போட்டு வைக்கப்பட்டுள்ளது. இவற்றின் மொத்தப் பெறுமதி ஆயிரம் கோடிரூபாய்க்கு மேல் தேறும் என கூறப்படுகின்றது.சாயிபாபாவிற்கு 67 வயதாகிறது. அவருக்குப் பிறகு இந்தச் சொத்துக்களை யார் அனுபவிப்பது என்பதில் தான் தகராறு எனத் தெரிவிக்கப்படுகிறது. இதுவே முக்கிய முரண்பாடு எனவும் கூறப்படுகிறது.

(9 ஆம் பக்கம் பார்க்க)

# பத்திரிகைகளும் -டி. பி. விஜேதுங்கா அரசும்; இழப்புக்களை மறைக்க அரசு முயற்சி

**மதன்**

சிறிலங்கா விவகாரங்கள் அனைத்துலக அளவில் கவனம் பெற்றுள்ளன. இப்பிரச்சினையை உலகம் உன்னிப்பாகக் கவனிக்கின்றது. இனத்துவேஷ யுத்தக் கொள்கை, மக்களை ஏமாற்றிய பாராளுமன்றத் தெரிவுக்குழு, யு என். பி. உள்கட்சி அரசியல் நிலை, படைகள் சந்திக்கும் இழப்புகள், யுத்தக் கைதிகள் விவகாரம், பண வீக்கம் ஆகியன குறித்துப் பாராளுமன்றத்தில் ஆளும் கட்சிக்காரர்களாலும், எதிர்க் கட்சிக்காரர்களாலும் பல கருத்துக்கள் சொல்லப்படுகின்றன. பத்திரிகைகளில், குறிப்பாகச் சிங்கள மொழிச் சிறு பத்திரிகைகளில் (Tabloid Size) இந்தப் பிரச்சினைகள் அடிக்கடி வெளிவருகின்றன. அரசின் அலங்கோலங்களை வெளிக்கொணர்ந்து அரசுக்கு மாசு கற்பிக்கும் பத்திரிகைகளின் செயற்பாட்டை நசுக்கவும், அரசுக்கு எதிரான பாராளுமன்ற விவாதங்கள் பத்திரிகைகளில் பதியப்படுவதைப் படிப்படியாக இருட்டடிப்புச் செய்யவும் டி பி. விஜேதுங்கா அரசு முனைந்துள்ளது. அத்துடன் உண்மை வெளியில் வந்தால் சிங்கள மக்கள் நச்சரிப்பார்கள் என்ற பயம் வேறு ஆகவே பாராளுமன்ற விவாதங்கள்- அவை பற்றிய செய்திகளைப் பத்திரிகையாளர் தொகுப்பது, அந்தச் செய்திகளைப் பத்திரிகைகளில் வெளியிடுவது தொடர்பாகப் புதிய நடைமுறைகளைக் கொண்டு வரப்போவதாக விஜேதுங்கா அரசு அறிவித்துள்ளது.

பாராளுமன்ற விவாதங்கள் பத்திரிகைகளில் வெளிவர வேண்டும் என்பதில் இரு கருத்து இருக்க முடியாது எத்தனையோ செய்திகள் பத்திரிகைகளில் வெளிவருகின்றன. அவற்றைப் பற்றி அக்கறை கொள்ளாமல் பாராளுமன்றச் செய்திகளை மாத்திரம் விஜேதுங்கா அரசு கவலைப் படக் காரணம் என்ன? அரசு சொல்லும் காரணம்:

பாராளுமன்றத்தில் உபயோகிக்கக் கூடாத அவமரியாதையான சொற்பிரயோகங்கள் பத்திரிகைகள் வாயிலாக வெளிவரலாம் என்பதே. ஆகவே, ஹான்சாட்டில் பிரசுரமாகும் பாராளுமன்ற விவாதங்கள் மற்றும் பேச்சுக்களைத் தான் பத்திரிகைகள் வெளியிடலாம் என்பது அரசின் நிலைப்பாடு. ஹான்சாட் செய்திகளைப் பத்திரிகைகள் வெளியிடுவதன் மூலம் செய்திகளைத் தாமதப்படுத்தலாம் என்று அரசு எண்ணுகிறது. மேலாக ஆட்சிக்குச் சங்கடம் கொடுக்கும் செய்திகளைத் திரித்தி வெளியிடுவது சுலபமான வழி என்பது விஜேதுங்கா அரசின் இந்தப் புதிய திட்டத்தின் மறைவான உள்நோக்கமாகும். ஏலவே அமைச்சரவைச் செய்திகளைத் திரித்து வெளியிடுவது மாற்று வழிகளில் சூட்சுமமாக நடந்து கொண்டுதானிருக்கிறது அரசு சொல்லுகிற வழிமுறை அரசுக்கு மட்டும் பொருத்தமாக இருக்கலாமே தவிர, அனைவருக்கும் அல்ல.

அரசு தரப்பில் சொல்லப்படுவது. வெறும் காரணமே தவிர உண்மையல்ல. முடக்குதிரைக்குச் சறுக்கியது சாட்டு என்பது போல் விஜேதுங்கா அரசு நடந்து கொளகிறது. போரின் அனர்த்தங்களையும், பாதகமான விளைவுகளையும் திரித்துக் கூறி மக்களிடமிருந்து உண்மைகளை மறைக்கும் முயற்சியில் பல விதமான செய்தித் தணிக்கை முறைகள் பின்பற்றப்படுகின்றன.

முதலாம் உலகப்போரின்போது ஜெர்மனிய அரசின் மூலவாசகம், ''எம்மால் அனைத்தையும் சொல்ல முடியாது ஆனால் சொல்வதெல்லாம் உண்மை'' என்பதாகும்.

மக்கள் விரோதப் போர்களில் ஈடுபடும் அரசுகளுக்கான பொதுக்குணமானது என்னவென்றால், தமது அரசியல், பொருளாதார தளங்களில் உள்ள குறைகளை மக்களிடமிருந்து மறைப்பதுதான். அமெரிக்கா வளைகுடா யுத்தத்தில் விளைவுகளை உலகில் எதிரொலிக்காமல் செய்யும் முயற்சிகளைமேற்கொண்டது. வளைகுடா மனிதஅழிவுகளை மக்களிடமிருந்து மறைக்கும் முறையை அமெரிக்கா வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியது.

> கொழும்பு நகரில் சிறு பத்திரிகைகள் என்ற புது மரபு உருவாகியுள்ளது இந்தப் பத்திரிகைகளும், அரசு சார்பற்ற பத்திரிகைகளும் கொஞ்சம் சூடாகவே எழுதும். இந்தப் பத்திரிகைகளின் எழுத்துக்கள் சில சமயங்களில் சிறிலங்கா அரசுக்குத் தேளாய்க் கொட்டுகின்றன. மக்களுக்குச் செய்திகளைத் திரித்துக் கூறும் புதிய நடைமுறைகளைச் செயற்படுத்தும் முயற்சியில் டி. பி. விஜேதுங்கா அரசு ஈடுபட்டுள்ளது.

இங்கிலாந்து கூட போயர் யுத்தச் செய்திகளை மக்களிடமிருந்து மறைக்க திரைமறைவு முயற்சிகளைமேற்கொண்டது. பிரித்தானிய குடியேற்றநாட்டுப் பாதுகாப்புக் குழு. அமைச்சரவையின் ஒப்புதலுடன் எதிரி நாடுகள் மற்றும் நட்பு நாடுகளினதும் கடலடி கேபிள் தொடர்பைத் துண்டித்தது ''தேசங்களுக்கு நட்பு நாடுகள் என்று இலலை. அக்கறைதான் உண்டு'' என்று இச்செயலை நியாயப்படுத்துகிறார் பாமர்ஸ்ரன் பிரபு. பிரித்தானிய அரசு தெற்கு மற்றும் கிழக்கு ஆபிரிக்கச் செய்திகளை திரித்து வெளியிட்டது. போயர் யுத்தச் செய்திகளை சுயாதீனமாகப் பெறுவது சாத்தியமற்றதாகியது. பிரித்தானிய அரசு செய்திகளை எதிர்கொண்ட முறை இது. இப்போது சிறிலங்கா அரசு ஹான்ஸாட் மூலம் செய்தித்தணிக்கை செய்யும் ஒரு புது மரபை ஆரம்பிக்கவுள்ளது. ஆனால் இரண்டிற்கும் அடிப்படைக் காரணம், ஆட்சிக்கு எதிரான விமரிசனத்தைத் தடுப்பதே.

யுத்தகாலச் செய்தித் தணிக்கைக்குப் பொதுவாக மூன்று காரணங்கள் தரப்படுகின்றன.

- பாதுகாப்புப் படைகளின் மனோதிடம் பேணுதல்.
- மக்களின் மனோ திடம் பேணுதல்.
- உலக அபிப்பிராயத்தைக் கட்டுப்படுத்துதல்.

ஏற்கனவே சொன்னது போல் ஹான்ஸாட் மூலம் சிறிலங்கா அரசு செய்திப் பரிவர்த்தனை செய்வது மேலே குறிப்பிட்ட மூன்று காரணங்களின் அம்சமாகும்.

சிறிலங்கா அரசு உட்பட தற்சமய உலக அரசுகள் செய்திகளைத் திரித்துக்கூறும் முறை, முரண்படச் செய்யும் விதம் பற்றிய ஆழமான ஆய்வு வேண்டுமானாலும் மேலோட்டமாகப்பார்க்கலாம்

முதலாம் உலகப் போரில் அகில உலக அரங்கில் ஜெர்மனிக்கெதிராய் செய்தி பரப்புவதில் பிரித்தானியா குறுக்கு வழிகளில் வெற்றியீட்டியது. ஜெர்மனியின் கடலடிக்கேபிள் தொடர்பை வெட்டிய பிரித்தானியா, ஜெர்மனியின் பெல்ஜியப் படையெடுப்பு பற்றிய செய்தியை வித்தியாசமாய் உலகிற்குத் திணித்தது. அத்துடன் பிரித்தானிய புலனாய்வுப் பிரிவில் அமெரிக்கப்பகுதி ஒன்று அமைக்கப்பட்டது. இதற்குப் பிரபல நாவலாசிரியர் கில்பேட் பாக்கர் தலைமை தாங்கினார். ஓர் இலக்கியவாதி என்ற வகையில் அவருக்கிருந்த செல்வாக்கையும், தொடர்பையும் பயன்படுத்தி அமெரிக்க பொதுஜன அபிப்பிராயத்தையே பிரித்தானியா திசை திருப்பியது. பொதுஜன அபிப்பிராயத்தை வசப்படுத்தும் அறிவுஜீவிகளையும் பிரித்தானிய அரசு நிர்ப்பந்தித்துள்ளது. ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் யுத்தம் தொடர்பாக 87 பிரசுரங்களை வெளியிட்டது. அரசியல் வாதிகள், பத்திரிகையாளர், அறிவுஜீவிகள் இந்தப் பிரசுரங்களால் கவரப்பட்டனர். ஆகஸ்ட் 1914 முதல் ஏப்ரல் 1917வரையிலான காலப் பகுதியில் கில்பேட் பார்க்கரின் பெயர் யுத்தம்தொடர்பானஎந்த ஆவணங்களிலும் பதியப்படவில்லை அவர் பெயர் பரமரகசியமாகவே வைக்கப்பட்டது சுமார் 360 அமெரிக்கப் பத்திரிகைகள் பிரித்தானியாவின் ஊதுகுழல்களாக மாறின. ஹரஸ்ட் பத்திரிகை நிறுவனத்தைத் தவிர, அனைத்துப் பத்திரிகைகளும் பிரித்தானிய அரசினால் கட்டுப்படுத்தப்பட்டது. மூன்று பிரதான அமெரிக்க செய்தித்தாள்களில் கடமையாற்றிய பிறெட்றிக் பாமர், தான் பிரித்தானியாவின் மாயையில் சிக்கிப் பிரசாரச் செய்திகளை எழுதியதாக ஒப்புக்கொள்கிறார். அதேவேளை நாவலாசிரியரான கில்பேட் பார்க்கர் பிரித்தானிய அரசின் கைப்பிள்ளையாக இயங்கினார் என்பது இரண்டாவது உலக யுத்தத்தின் பின்தான் வெளிச்சத்துக்கு வந்தது.

## வியற்னாம் மற்றும் போக்லாண்ட் யுத்தங்கள்

அமெரிக்கா முதலில் கைநனைத்த கெரில்லாச் சண்டை வியற்னாம் யுத்தம். அமெரிக்கா வியற்னாம் யுத்தத்தின் ஆரம்பத்தில் பத்திரிகைகள் மீது அதிகாரம் செலுத்த விரும்பாதது போல் நடந்து கொண்டது இதுவெறும்கண் துடைப்பே இதிலும்சுயநல அரசியல் தான். வியற்னாம் மீது அமெரிக்கா பிரகடனப்படுத்தாதயுத்தத்தில் ஈடுபட்டிருந்ததால்செய்திகள்குறித்து அதிகம் அலட்டிக்கொள்ளவில்லை.

வியற்நாம் யுத்தத்தில் அமெரிக்க அரசின் செய்தித் தொடர்புச் சாதனங்களுக்குச் சவால் என்றும் சொல்லலாம், வியற்நாம் யுத்தச் செய்திகள் அமெரிக்க அரசினால் 'சமைக்கப்' பட்டவை. பென்ரகன் பிரசாரப் பிரிவில் சுமார் 2 800 பேர் பணிசெய்தனர். கென்னடி அரசின் 1006(இலக்கம்) கேபிள்தொடர்பு இதனை ஊர்ஜிதம் செய்கிறது. மேலும் ஐக்கிய அமெரிக்கத் தகவல் பிரிவு செய்தியாளரை நன்கு உபசரித்தது ராஜபோக வசதிகள் வழங்கியது. New Statesman செய்தியாளர் றிச்சேட் வெஸ்ட். உபசரிப்பால் தடுமாறிப்போனதாக எழுதுகிறார். New York Times செய்தியாளர் ஹரிசன், ஈசோல்ஸ்பரி 1966 இல் ஹனாய் நகரிலிருந்து அமெரிகக நிர்வாகத்தின் வியற்நாம் யுத்தத்தைக் கடுமையாகச் சாடி எழுதினார். இது ராஜாங்கச் செயலாளர் டீன் றஸ்க்கை எரிச்சல்படுத்தியது செய்தியாளர் வட வியற்நாம் தலைநகரிலிருந்து எப்போது வெளியேறுவார் என்று டீன் றஸ்க் அங்கலாய்த்தார். பத்திரிகைச் சுதந்திரம் என்று கூறப்பட்ட போதிலும் 1971 லாவோஸ் படையெடுப்பின்போது செய்தியாளர் அனுமதிக்கப்படவில்லை கம்போடியாவில் அமெரிக்கத் தூதுவராலயம் News Week செய்தியாளர் சில்வியாவை வெளியேற்றும்படி அரசைக் கேட்டது.

போக்லான்ட் யுத்தத்திலும் இதேகதைதான். செய்திப் படங்கள் கூட மழுப்பலாக வழங்கப்பட்டன பிரித்தானிய விசேட அதிரடிப் படை 29 செய்தியாளர்களை மட்டும் அனுமதித்தது. அவர்களும் முழுக்க முழுக்க ஆங்கிலேயர்கள். வேற்றுநாட்டுச் செய்தியாளர் அனுமதிக்கப்படவில்லை. லண்டனை மையமாகக் கொண்டியங்கும் ராய்ட்டர் செய்திஸ்தாபனம் இது பற்றிப் பின்வருமாறு கூறுகிறது. 'ராய்ட்டருக்குத் தேசிய அக்கறை அல்லது தேசியப் பொறுப்பு என்று எதுவும் இல்லை. அர்ஜன்டீனவாக இருந்தால் என்ன, பிரித்தானியாவாக இருந்தால் என்ன, ஏனைய யுத்தங்களில் ராய்ட்டர் எப்படி நடந்துகொண்டதோ, அப்படி போக்லான்ட் யுத்தத்திலும் நடந்து கொள்ளும்'

## வளைகுடா யுத்தமும் ரி. வியும்

வளைகுடா யுத்தம் உண்மையில் பத்திரிகைகளுக்கு ஒரு தண்டனைதான் பத்திரிகையாளரைப் பொறுத்தவரை எந்தவித தகவலும் வழங்கப்படவில்லை. பத்திரிகைகளுக்கு மேல் தொலைக்காட்சி வந்து அமர்ந்து கொண்டது. போரின் இறுதியில் அமெரிக்க படைத்தளபதி ஜெனரல் நோர்மன் ஸ்வாஸ்கோர்வ் வழங்கிய தகவல்களைத் தவிர வேறு செய்தி கிடையாது. வளைகுடா யுத்தத்தை ஒரு தொடர்புச் சாதன யுத்தமென்றே கூறலாம். C. N. N. தொலைக்காட்சிச் செய்தியாளர் அமெரிக்கா சார்பாக எதை மறைக்க வேணுமோ அதை மறைத்தும், எதைத்தூக்கிப் பிடிக்க வேணுமோ அதைத் தூக்கிப் பிடித்தும்ஒளிபரப்பினார், ஜனவரி 17 இல் பக்தாத் அல் றசீட் ஹொட்டலில் இருந்து அவர் தொலைக்காட்சியில் பின்வருமாறு கூறுகிறார்: ''குண்டுகள் வெடிப்பதை இப்பொழுது கேட்கலாம். நரகத்தின் மையத்தில் இருப்பது போன்ற உணர்வு.'' இது செய்தி பரிவர்த்தனையில் ஒரு புதிய மூறை. நடந்து முடிந்ததை வெளியிடுவது தான் செய்தி. நிகழ்ந்து கொண்டிருப்பதையே C N N செய்தியாளர் றெட் ரேணர் தொலைக்காட்சியில் வாசிக்கிறார். இதற்காக Time இதழ் றெட்ரேணருக்கு ''ஆண்டு மன்னன் - 1991'' என்று விருது வழங்கியது பக்தாத்தில் பெரும் அழிவுகள் இல்லாதது போல் செய்திகள் ஒளிபரப்பப்பட்டன. ஒளிபரப்பப்பட்ட காட்சிகளை ஜெனரல் சுவாஸ்கோர்வ் ''வீடியோ விளையாட்டுக்கள்'' என்கிறார். அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு திட்டமிட்டு தொலைக்காட்சி நேர அட்டவணையைப் பின்பற்றிய வளைகுடா யுத்தத்தை ஆரம்பித்தது.

எது எப்படியிருந்தாலும், யுத்தங்களின் போது செய்திகளைத் திரித்துக் கூறிபது எதிர்பார்த்த பலனைத்தரவில்லை. யுத்தம் பற்றிய உண்மைச் செய்திகள் வெளிவரத்தான் செய்தன. ஊர் வாயை உலை மூடியால் மூட முடியுமா?

கருத்துப்பரிமாற்றம், வாதப்பிரதிவாதங்கள், அபிப்பிராய பேதங்கள் 'ஜனநாயக' நாடுகளில் இருப்பதாக எழுதவும். பேசவும் செய்கிறார்கள். ஜனநாயக நாடுகள் என்று அழைக்கப்படும் அமெரிக்காவையும், இங்கிலாந்தையும் பின்பற்றி சிறிலங்காவிலும் அரசு செய்திகளைத் திரிக்கும் முயற்சி முறையை மேற்கொள்கின்றது வெகுசனத் தொடர்புச் சாதனங்களைப் பயன்படுத்தி ஹிட்லர் வழியில் சிறிலங்கா அரசின் இனத்துவேஷப் பிரசாரம் உச்சநிலையை அடையலாம். இதில் இன்னொரு விஷயமும் உள்ளது. ஹிட்லர் யுத்தச் செய்திகளைத் திரித்துப் பிழைபட வெளியிட்டார். கடைசியில் உலகமே அவரை நம்பத் தயாராக இல்லை. 2-வது உலகப் போரில் ரஷ்யா மீது ஜெர்மனியின் தாக்குதல் பற்றிய புலனாய்வுத் தகவல் கிடைத்ததும், அது ஹிட்லரின் 'ஏமாற்று' என்று ஸ்டாலின் இருந்து விட்டாரம். டி. பி. விஜேதுங்காவின் அரசைக் காலப்போக்கில் யார் நம்பப் போகிறார்கள்?


## தொடர்பு கொள்ளவும்

யாழ். மாவட்டத்தில் குழாய்க்கிணறு அடித்துக் கொடுப்பதில் அனுபவம் வாய்ந்தவர்கள் 06-08-93, 07-08-93, 08-08-93 ஆகிய தினங்களில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
உட்கட்டுமானப்பகுதி
த. பொ மே. கழகம்,
இ. 03, செம்பியன் லேன்,
கொக்குவில்.

(அ-7144)

# கிரோசிமாவில் பீ-29

இன்னும் சில வருடங்களில் 21 ஆம் நூற்றாண்டு வரப் போகிறது. ஆனாலும் மனிதநேயம பேணும் மக்கள் 1945ஆம் ஆண்டு ஆகஸ்ட் 6ஆம் திகதி கிரோசிமாவில வீசப்பட்ட அணுக்குண்டைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இக்குறிப்பு அமெரிக்கா அணுக்குண்டு வீசிய அந்த நெஞ்சைத் தொடும் நாளை நினைவூட்டுகிறது.

**1945**-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஆறாம் நாள் காலை. வழமை போலவே கிரோசிமாவிலும் கதிரவன் புன்முறுவல் பூத்தபடி தன் இளங்கதிரைப்பரப்பினான். மக்கள் வழமைபோல் தமது அன்றாட கடமைகளை கவனித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது ...

அமெரிக்காவின் வான்படைக்குச் சொந்தமான "பீ 29" ரக குண்டுவீச்சு விமானமான 'இனோடா கிறே' [Enoda-Gray B-29] அதன் ஓட்டுநரான கேணல் ரிப்-பெற்ஸ் [Colonel Tibbets] என்பவரால் பெயர் குறிப்பிடப்படாத விமான தளத்தில் இருந்து செலுத்தப்படுகிறது.

20-ம் நூற்றாண்டின் மனித அழிவை நடாத்துவதற்காகவும், வரலாற்றில் கறை ஏற்படுத்துவதற்காகவும், அது தனது பயணத்தை மேற்கொள்கிறது.

நேரம் காலை 8 மணி 10 நிமிடம்.

இரோசிமா நகர் வழமை போல் இயங்கிக்கொண்டிருக்கிறது ஏதுமறியாத அப்பாவி மக்கள் தமது அன்றாடவேலைகளை சுறுசுறுப்புடன் செய்து கொண்டிருந்தனர். திடீரென கிரோசிமாவின் வான்வெளியில் பேரிரைச்சலுடன் சிறியதொரு விமானம் வலம் வருவதை மக்கள் கண்டனர்.

பாதுகாப்பு நிலைகளை நாடினர்.

அதற்குள் பீ-29 விமானத்தில் இருந்துஅணுக்குண்டு வீசப்பட்டுவிட்டது. எங்கும் பாரிய ஒளிக்கதிர் பரவுகிறது. அப்போது நேரம் காலை 8 மணி 11 நிமிடம் இந்த நேரம் தான் அணுயுகத்திற்கு முற்பட்ட காலம் முடிவடைந்த நேரம் ஆகும்.

ஒரு நொடிக்குள் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்படுகிறார்கள் இதில் மருத்துவமனை நோயாளர்கள், வைத்தியர்கள், குருமார்கள், சிறுவர்கள், முதியவர்கள் என பலதரப்பட்டவர்களும் அடங்குவர். தாவரங்களும்மற்றைய உயிரினங்களும் கூடவே அழிக்கப்படுகிறது.

குண்டுவீச்சில் இறந்தவர்கள் பலத்த வெம்மை கலந்த காற்றின் உந்து விசையால் வீழ்த்தப்பட்டனர். உடல் முழுவதும் எரிகாயங்கள் ஏற்பட்டிருந்ததை அவர்கள் உணர்ந்தனர்.

இக்குண்டு வீச்சால் பாதிக்கப்பட்டவர்கள் இன்னும் இறந்து கொண்டே உள்ளனர். இதனால் இறந்தவர்களின் எண்ணிக்கையின் சரியான விபரம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

கதிர்வீச்சிற்குள்ளாகியவர்களின் வழியான புதிய தலைமுறையினர்பலவகை ஊனமுற்றவர்களாகவும், நிறைகுறைவு. அதீத வளர்ச்சி போன்றஇன்னோரன்ன கொடியநோய்களால் பீடிக்கப்பட்டு உள்ளனர் அப்பிரதேசத்திலுள்ளவர்களை மற்றவர்கள் திருமணம் செய்ய அஞ்சுகின்றனர். இப்படிப்பட்ட பல சோகங்களால் அந்த மக்கள் இன்னும் அணுஅணுவாக இறந்து கொண்டே இருக்கிறார்கள். அந்த நேரத்து நிகழ்வின் போது சுவர்களிற்கருகில் நின்றவர்களின் உரு நிழலகளாக சுவரில் பதிந்துள்ளது. இரண்டாவது அணுக்குண்டு நாகசாகி மீது ஆகஸ்ட் திங்கள் ஒன்பதாம் நாள வீசப்பட்டது.

இந்தஅணுக்குண்டு 1945-ம் ஆண்டு யூலை மாதம் 16-ம் திகதி நியூமெக்சிகோ பாலைவனத்தில பரீட்சித்துப் பார்க்கப்பட்டது.

–கிருபா


வங்கித்துறை? நீதித்துறை? முகாமைத்துவம்?
நிர்மாணத்துறை? மின்னியல்? இலத்திரனியல்?
தொலைத்தொடர்பு? போக்குவரத்து? விவசாயம்?
நிர்வாகத்துறை? சேவைத்துறை? பொருளியல்?
கட்டிடக்கலை? பொறியியல் துறை?
கணக்கியல்? கணணியல்? புவியியல்?
கைத்தொழில் துறை? இயந்திரவியல்?
மருத்துவம்? கல்வித்துறை?
நில அளவையியல்?
பத்திரிகைத் துறை?

இன்றைய இளம் சமுதாயத்திற்கு




கல்வி/தொழிற்துறை சார்ந்த வழிகாட்டல்

**CAREER GUIDANCE**

- தொழிற் கல்விக்கான வழிகள் எவை?
- படிக்கவேண்டிய பாடங்கள் என்ன?
- கல்வி அறிவு எந்த மட்டத்தில் தேவை?
- பல்கலைக்கழகம் சென்றுதானா இவற்றைப் பெறவேண்டும்?
- தொழில்பற்றிய விளக்கங்களை யாரிடம் பெறுவது?
- இவ்வாறான தொழில்கள் என்ன வருமானத்தைத் தரும்?

பிறநாடுகளில் இருக்கும் இத்தகைய தொழில் வழிகாட்டும் (CAREER GUIDANCE) சேவை இப்பொழுது இங்கும் கிடைக்கும்!

உங்கள் எதிர்காலத்தின் வழிகாட்டி ... "திசைகாட்டி"

**COMPASS**

கல்வி / தொழிற்துறை சார்ந்த ஆலோசனைச் சேவை

"விமலம்" நல்லூர் குறுக்குத் தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(சி7148)



யாழ்ப்பாண பல்கலைக்கழக பேராதனை

வெளிவாரிப் பரீட்சைகள் – 1994

**G. A. Q; Ist in COM.**

பொருளியல்

**S. வரதராஜன் B. A. (Hons.)**

பிரிவு I சனி, ஞாயிறு 5.00 - 6.00 P.M.
பிரிவு II செவ், வியாழன் 6.30 – 7.30 A.M.

**ஆரம்பம் 07. 08. 1993**
சனி 5. 00 P.M.

பேராதனைப் பல்கலைக்கழக B.A. பொருளியல் வகுப்பு நடைபெறுகின்றது.

**BECON**

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/7141)



## தனு ஸ்ருடியோ

நிகழ்வுகள் பல விதம்!
நினைவில் நிற்பவை ஒரு சில!!
ஆனால்
வாழ்முழுவதும் வைத்துப்பார்த்து
ஞாபகப்படுத்தக் கூடிய கலர், கறுப்பு,
வெள்ளைப் படங்களை பல அளவுகளில்
எடுத்துக்கொள்ள

## தனு ஸ்ருடியோ

கேணியடி ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு (பள்ளத்தடி)

(காந்தி முகுந்தன் தூபி அருகாமையிலுள்ள ஒழுங்கை-குளப்பிட்டி ஆனைகோட்டை வீதி)

(5618)


யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்

## பொது அறிவித்தல்

ஸ்ரீலங்கா ஜனநாயக சோசலிசக் குடியரசின் மேன் முறையீட்டு நீதிமன்ற 506/93ஆம் இலக்க வழக்கின் படியான தடையுத்தரவுக்கமைவாக 1993ஆம் ஆண்டின் மீளாய்வு செய்யப்பட்ட வருடாந்த மதிப்பீட்டின் பிரகாரமான சோலைவரி அறவீடு மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளது என்பதனை மாநகர சபையின் சகல வரியிறுப்பாளர்களுக்கும் இத்தால் அறியத் தருகின்றேன்.

வே. பொ. பாலசிங்கம்,

மாநகர அலுவலகம், மாநகர ஆணையாளர்.
யாழ்ப்பாணம். (சி-7138) யாழ்ப்பாணம்.
04-08-1993

## அறிவித்தல்

வட இலங்கைச் சங்கீத சபை

## அறிமுறைத் தேர்வு-1993

தவிர்க்கமுடியாத காரணங்களால் பின்போடப்பட்ட மேற்படி தேர்வு 1993-09-04 (சனி), 1993-09-05 (ஞாயிறு) ஆகிய திகதிகளில் நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. தேர்வு நாடிகளுக்கு முன்னர் அறிவிக்கப்பட்ட தேர்வு நிலையங்களில் 1993 05-15ந் திகதி நடைபெறவிருந்த பாடங்கள் 1993-09-04ந் திகதி சனிக்கிழமையும், 1993-05-16ந் திகதி நடைபெறவிருந்த பாடங்கள் 1993-09-05ந் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறும் என்பதைத் தேர்வு நாடிகளுக்கு அறியத் தருகிறேன்.

இ. சுந்தரலிங்கம்,

யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளரும்,
(சி-7136) வடஇலங்கைச் சங்கீதசபைத் தலைவரும்.

யாழ்ப்பாணம்

# இஸ்ரேலும் — ஒருவார காலப்போர்களும்

கடந்த மாதம் 25ஆம் திகதி ஞாயிறு அதிகாலை தென் லெபனான் பகுதி மக்கள் உறக்கத்தில் இருந்து விழிக்கும் முன்பே இஸ்ரேலியயுத்த விமானங்கள் இவர்களது குடியிருப்புக்கள் மீது தாக்குதலை ஆரம்பித்தன. இஸ்ரேலிய ஜெட்விமானங்களின் கண்மூடித்தனமான குண்டுவீச்சையடுத்து காலையில் தென்லெபனானை நோக்கி வடஇஸ்ரேல் பகுதியிலிருந்து எறிகணைகள் அடுத்தடுத்து வீழ்ந்து வெடித்தன. இது ஓய்ந்ததும் மீண்டும் இஸ்ரேலிய போர்விமானங்கள் குண்டுத் தாக்குதல் நடத்தின. இப்பகுதி மக்களுக்கு இஸ்ரேலிய தாக்குதல்கள் பழக்கப்பட்டு விட்டதாயினும் அன்றைய தினம் நடந்த தாக்குதலின் கொடூரம் ஏன் என்று தெரியாது விழிக்க வைத்தது. தாக்குதலுக்கு இஸ்ரேல் தரப்பில் கூறப்பட்ட காரணம் தென்லெபனான் பகுதியில் உள்ள ஈரானிய ஆதரவு பெற்ற ஹிஸ்புல்லா இயக்கத்தினர் நடத்திய கட்யுஷா ஏவுகணைத்தாக்குதலில் மூன்று இஸ்ரேலிய வீரர்கள் பலியானது என்பதாகும்.

இஸ்ரேல் தென்லெபனான் மீது விமானத்தாக்குதலையும் பீரங்கித்தாக்குதலையும் மேற்கொண்ட அதே சமயம் ஹிஸ்புல்லா இயக்கத்தினர் வட இஸ்ரேல் மீது தொடர்ந்து ஏவுகணைகளை செலுத்திய வண்ணம் இருந்தனர். தாக்குதல் இவ்வாறு இரண்டு தினங்கள் தொடர்கிறது. இரண்டாம் நாள் தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் இஸ்ரேலிய வானொலியில் உரையாற்றிய இஸ்ரேல் பிரதமர் இட்ஷாக் ராபின் ''இப்பகுதியில அமைதி ஏற்படும் வரை எமது தாகுதல் தொடரும். எமது நோக்கம் நிறைவேறும் வரை என்ன நடவடிக்கையை நாம் எடுப்போம் என்பதை கூறமுடியாது" என்றார்.

எனினும் இஸ்ரேல் தனது நோக்கத்தை நிறைவேற்ற என்ன நடவடிக்கையை எடுத்துள்ளது என்பது மறு நாளே-மூன்றாம் நாளாக இஸ்ரேலிய தாக்குதல் தொடர்நதுகொண்டிருந்தபோதே-தெரிந்தது. மூன்றாம் நாள் நண்பகல் அளவில் இஸ்ரேல்தென்லெபனான் குடியிருப்புகள் மீது நடத்திய கண்மூடித்தனமான தாக்குதலை திடீரென நிறுத்தியது. இஸ்ரேல்-லெபனான் எல்லைப் பகுதியில் அமைந்திருந்த இஸ்ரேல் வானொலி நிலையம் ஒன்று ''தென்லெபனான் மக்களை,'' தாக்குதல் ஓய்ந்துள்ள இந்த சில மணி நேரங்களுள் உங்கள் வீடுகளைவிட்டு வெளியேறிவிடுங்கள். நீங்கள் வெளியேறுவதற்கான கால அவகாசம் சில மணிநேரங்களில் முடிந்ததும் மீண்டும் இப்பகுதியில் தாக்குதல் ஆரம்பிக்கப்படும்'' எனமீண்டும்மீண்டும்அறிவித்தவாறு இருந்தது. பீதியுற்ற மக்கள் கும்பல்கும்பலாக தமது குடியிருப்புகளை விட்டு அகதிகளாக தமது கையில் கிடைத்தவற்றுடன் தலைநகர் பெய்ரூட் நோக்கி இடம் பெயர்ந்தனர். ''மக்கள் கிராமங்களிலிருந்து அதிகமாகவே வெளியேறுகின்றனர். இத்தொகை இன்னமும் அதிகரிக்கப்படும்'' என இஸ்ரேல் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் எகுட் பராக் தெரிவித்தார்.

தொடர்ந்து நான்காவது நாளும் இஸ்ரேல் தனது தாக்குதலைக் கடுமையாக நடத்தியது. இடையில் இரு மணி நேரம் மக்கள் அகதிகளாக வெளியேற அவகாசம் கொடுக்க தாக்குதலை நிறுத்திவைத்தது.

இஸ்ரேலின் இந்த நடவடிக்கையினால் லட்சக்கணக்கான மக்கள் (மூன்று லட்சம் எனப்படுகிறது) தென் லெபனானிலிருந்து அகதிகளாக தலைநகர் நோக்கி இடம்பெயர்ந்தனர். ''நாம் எதிர்பார்த்ததை விட மக்களைத் தலைநகருக்கு விரட்டியடிக்கும் திட்டம் வெற்றியடைந்துள்ளது'' என்றார் இஸ்ரேலிய புலனாய்வு அதிகாரி. ''லெபனான் அரசுக்கு இம்முறை அகதிகள் மூலம் நெருக்கடி கொடுக்கவுள்ளோம்'' என்றார் இஸ்ரேல் பிரதமர் இட்ஷாக் ராபின்.

இவ்வாறு தென்லெபனான் மக்களை அவர்களது குடியிருப்புக்களிலிருந்து அடியோடு விரட்ட இஸ்ரேல் ஏன் இந்த நடவடிக்கையை எடுத்தது?

தென்லெபனான் பகுதியிலிருந்து மூஸ்லிம் தீவிரவாதிகளான ஹிஸ்புல்லா மற்றும் பாலஸ்தீன இயக்கத்தினர் இஸ்ரேலிய ரோந்துப் படையினரை அடிக்கடி தாக்கிச் சேதம் விளைவித்து வந்தனர். இவர்களை இப்பகுதியிலிருந்து விரட்டியடிக்க ஒரேவழி இவர்களுக்கு இடமளித்த லெபனான் அரசை நெருக்கடிக்கு உள்ளாக்கச் செய்வதே என இஸ்ரேல் முடிவு செய்தது. லெபனான் அரசை நெருக்கடிக்குள்ளாக்க அகதிகள் பிரச்சினையைத் தோற்றுவிப்பதே சிறந்தவழி என இஸ்ரேலியப் புலனாய்வாளர்கள் ஆலோசனை தெரிவித்தனர். தென் லெபனானில் இருந்து லட்சக்கணக்கானவர்களை அகதிகளாக இடம்பெயரச் செய்து அந்த அகதிகள் தலைநகர் பெய்ரூட்டில் போய்க் குவியும் போது அவர்களைப் பராமரிப்பதிலும். கையாள்வதிலும் லெபனான் அரசு திண்டாடும் இந்த வேளையில் அது தென் லெபனான் பகுதியில் உள்ள கிளர்ச்சியாளர்களை அங்கிருந்து வெளியேறுமாறு நிர்ப்பந்தம் செய்ய வேண்டிய நிலை ஏற்படும் என இஸ்ரேலிய இராணுவ ஆய்வாளர்கள் கணிப்பட்டனர். இரண்டாவதாக மக்களை வெளியேற்றுவதன் மூலம் ஹிஸ்புல்லாக்களை அவர்களிடமிருந்து தனியே பிரித்துவிட முடியும் இதன்மூலம் அவர்களை இப்பகுதியிலிருந்து அகற்றி விடுவது சுலபமாகி விடும் என்றும் இஸ்ரேல் திட்டமிட்டது. இஸ்ரேலின் திட்டத்தில் அகதிகளை வெளியேற்றி லெபனான் அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் முதல்படி வெற்றியடைந்து விட்டது என்றே கூறலாம். இந்நிலையில் ஒருவாரமாக இஸ்ரேல்தென்லெபனான் மீது நடத்திய தாக்குதலை அமெரிக்காவின் கோரிக்கையை ஏற்று நிறுத்தியது போன்று தற்காலிகமாக நிறுத்திக் கொண்டது. ஏழு நாட்கள் இஸ்ரேல் படைகள் நடத்திய தாக்குதல் மக்களை அகதிகளாக விரட்டியடிக்கும் நோக்கம் கொண்டது என்பதை இஸ்ரேலியப் பிரதமர் தொலைக்காட்சி உரையில் வெளிப்படையாகவே ஒப்புக் கொண்டார்.

### துஷ்யந்தன்




★ ★

## ஆறு நாட்கள் போர்–I

1967 மே 19ஆம் திகதி...... ஐ. நா. அமைதிப் படைகள் காஸாப் பகுதியிலிருந்து எகிப்திய அரசின் வேண்டுகோளின் பேரில் வாபஸாகின. (முன்னதாக ரைரன் நீரிணை பகுதியை எகிப்து தமக்குரியது எனக் கூறி அதை அடைத்து விட்டதனால் கப்பல் போக்குவரத்துகள் பாதிக்கப் படவே அங்கு ஐ. நா. அமைதிப் படை அனுப்பப்பட்டது) இதைத் தொடர்ந்து எகிப்து இஸ்ரேல் முறுகல் நிலை போராக வெடித்தது. இது இஸ்ரேல் வரலாற்றில் பிரபலமான முதலாவது ஆறு நாள் போர் என அழைக்கப்பட்டது. ஜூன் 5ஆம் திகதி போர் ஆரம்பமானது அன்று காலை இஸ்ரேலிய விமானங்கள் தமது தீரமிகு தாக்குதலினால் எகிப்து, சிரியா, ஜோர்டான் ஆகிய நாடுகளின் விமானப் படைகளை முற்றாகத் துடைத்தெறிந்தது. தாக்குதலுக்காக இந்நாட்டு விமானப் படை செயற்பட முன்பே விமானங்கள் தளத்தில் தரித்து நிற்கும் வேளையில் அவ்விமானங்கள் இஸ்ரேலிய விமானப் படையின் துரிதமான குண்டு வீச்சினால் அழிந்தன, 25 தளங்களில் நின்ற 450 விமானங்கள் இவ்வாறு அழிக்கப்பட்டன (முழு ஆறு நாள்போரில் இஸ்ரேல் 26விமானங்களையே இழந்தது) விமானப்படையின் உதவியின்றி எகிப்திய, சிரிய, ஜோர்டான் தரைப்படைகள் இஸ்ரேலுடன் போரிட வேண்டிய நிலை.

ஜூன் 6 சினாய் பகுதியில் கடும் போர். இஸ்ரேல் படைகள் எதிரியின் விமானப்படையின் எதிர்ப்பின்றி சுலபமாக சுயஸ் கால்வாய் நோக்கி நகர்ந்தன. மிற்லாபாஸ் என்ற பகுதியில் நடந்த கொடூரமான போரில் எகிப்து பலத்த இழப்பைச் சந்தித்தது. எனினும் தனது டாங்கிகளை நகர்த்தி இஸ்ரேல் துருப்புக்கள் சுயஸ் கால்வாயை நோக்கி நகர்வதைத் தடுத்திட முனைந்தது.

ஜூன் 7. எகிப்திய டாங்கிப் படையை தகர்த்து முன்னேறிய இஸ்ரேல் படை சுயஸ் கால்வாய் பகுதியை அடைந்தது. பழைய ஜெருசலேம் பகுதி இஸ்ரேலிடம் பிற்பகலில் வீழ்ந்தது. ஐ.நா.அமைதி ஒப்பந்தத்தை ஏற்பதாக ஜோர்டான் அறிவித்தது.

(8ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி ஆட்சிமுறை மாற்றம் ஐ. தே. க. தயாராகிவிட்டது?

அரசியலமைப்பை மாற்றுவது அல்லது திருத்துவது தொடர்பாக ஆராய தெரிவுக்குழுவொன்றை நியமிப்பதற்கு சிறிலங்காப் பாராளுமன்றம் அண்மையில் அங்கீகாரம் அளித்துள்ளது. சிறிலங்காக நாடாளுமன்றத்தின் சபாநாயகரினால் அமைக்கப்படவிருக்கும் பதினெட்டு அங்கத்தவர்களைக் கொண்ட குழு இன்றைய அரசியலமைப்பை ஆராய்ந்து தனது அறிக்கையையும் சிபார்சுகளையும் ஒருவருட காலத்தினுள் சமர்ப்பிக்க இருக்கின்றது

அரசியலமைப்பு என்பது ஒரு நாட்டின் மேல் வரிச்சட்டம் என்றும், ஒரு நாட்டை மற்ற ஒரு நாட்டிற்கு அறிமுகப்படுத்தும் புகைப்படம் என்றும் கூறப்படுவது உண்டு. ஒரு நாட்டின் அதி உயர் சட்டம் எனப்படும் அரசியலமைப்பானது அந்நாட்டு அரசின் அரசாங்கத்தின் அமைப்பை விளக்கும் மாண்புடையதாகும். ஆனால் இன்றைய சிறிலங்காவில் அதுவும் கூட கேள்விக்கு உள்ளாகியிருப்பது இரகசியமானதல்ல.

சகல நிறைவேற்று அதிகாரங்களையும் கொண்டதான ஜனாதிபதி ஆட்சி முறை தென்னிலங்கையிலும்பல்வேறு நெருக்கடிகளை ஏற்படுத்தியிருப்பது வெளிப்படை. குறிப்பாக இந்த ஆட்சியின் கீழ்உருவான ஜனாதிபதிகள் இருவருமேசர்வாதிகாரிகளாகசெயற்பட்டனர் ஆட்சிக்கு எதிரான போக்குடைய அனைத்து சக்திகளுக்கும் அச்சமூட்டுபவர்களாக மாறியிருந்தனர் மாற்றுக்கருத்துக்களை முன்வைத்து செயற்பட்ட எதிர்ப்பு சக்திகளைமட்டுமன்றி ஜனநாயகசக்திகளையும் பலமிழக்கச் செய்ய இச் சர்வாதிகாரிகள் மேற்கொண்ட வழிமுறையும், கையாண்ட தந்திரங்களும் அரசியல்வாதிகள் மத்தியில் உளக்குமைச்சலை ஏற்படுத்திபிருந்தது இவற்றின் விளைவாக எதிர்க்கட்சிகள் மட்டுமன்றி ஆளுங்கட்சியின் ஒருபகுதியினரும் வினாதி தொடுக்கும் நிலைக்கு உருவாகியது. இது மாகாணசபைகளுக்கான தேர்தல் பிரசாரங்கள் இடம்பெற்ற போது துல்லியமாக வெளிப்படையாகியது எனினும் இந்த தேர்தல் பிரசாரங்களுக்கும் மத்தியில் பிரேமதாசா கொலையுண்ட பின்னர் பதவியேற்ற டி.பி.விஜேதுங்க அரசியலமைப்பில் மாற்றங்கள் செய்து கொள்வது பற்றிச் சிந்திக்க வேண்டியவர் ஆகினார். அதாவது சர்வாதிகார ஆட்சியை நிலைநிறுத்துவதற்காக மனச்சாட்சிக்கு விரோதமாகக்கூட கட்சியின் நலனுக்குக்கட்டுப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுப் போயிருப்பதை அரசியல் வாதிகள் மெல்ல மெல்ல உணர ஆரம்பித்தபோதுதான் அரசியலமைப்பு கேள்விக்கு உள்ளாகியிருக்கிறது.

### இளையவன்

### 1978ஆம் ஆண்டின் அரசியலமைப்பு

1978ஆம் ஆண்டின் செப்டம்பர் 7ஆம்திகதி முதல் இன்றைய அரசியலமைப்பு அமுல்படுத்தப்பட்டுவருகின்றது என்பதும், இது அமுலுக்கு கொண்டு வரப்பட்ட அதே தினத்தில் இரத்மலான விமான நிலையத்தில் தரித்து நின்ற 'அவ்ரோ' ரக விமானம் குண்டு வெடிப்பில் சிதற வைக்கப்பட்டதன் மூலம் விடுதலைப் புலிகள் இந்த அரசியலமைப்பை அதன் பிறப்பு முதலே எதிர்த்து வருகின்றனர் என்பதும் குறிப்பிடக் கூடியதாகும். ''வெஸ்ட் மினிஸ்டர்'' ஆட்சிமுறை எனப்படும் பாராளுமன்ற ஆட்சி முறைக்குப் பதிலாக ''வெஸ்ட் மினிஸ்டர்'' முறையின் சில அம்சங்கள், அமெரிக்க அரசியலமைப்பின் சில அம்சங்கள், பிரான்சு அரசியலமைப்பின் சில அம்சங்கள் என மூன்றை

(8ஆம் பக்கம் பார்க்க)

## இஸ்ரேலும்

ஜூன் 8 சுயஸ் கால்வாயின் கிழக்குக் கரையை இஸ்ரேல் அடைந்தது. ஜோர்டானின் மேற்குக் கரை இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்டது. எகிப்து ஐ.நா வின் அமைதி உடன்படிக்கையை ஏற்பதாக அறிவித்தது.

இஸ்ரேல் படைகளின் கவனம் ஜூன் 9இல் சிரியா பக்கம் திரும்பியது. கலீலீ கடலை நோக்கியதாக உள்ள கோலான் குன்றுப் பகுதிக்கு இஸ்ரேலிய படைப் பிரிவுகள் சென்றடைந்தன.

ஜூன் 10. சிரியாவில் கடும் மோதல் வெடித்தது. இஸ்ரேலிய அதிரடிப் படைகள் குனீற்றா பகுதியை நண்பகலளவில் கைப்பற்றிக் கொள்ள ஆறுநாள் போர் முடிவுக்கு வந்தது.

★ ★

### ஆறுநாட்கள் போர்-II

இஸ்ரேலின வரலாற்றின் இரண்டாவது ஆறு நாட்கள் போர் 1973 ஒக்டோபர் 12-ம் திகதி வெடித்தது. தனது பல பகுதிகளை இழந்திருந்த அரபு நாடுகள் சுயஸ் கால்வாயின் மேற்குப் பகுதியில் இஸ்ரேல் அமைதி உடன்படிக்கையை மீறி தாக்க முனைந்ததாகக் கூறி போர் பிரகடனம் செய்தன.

இம்முறை எகிப்து சோவியத்யூனியனிடம் பெறப்பட்ட ஆயுதங்களைக் கொண்டு தம்மைப் பலப்படுத்திக் கொண்டு இஸ்ரேல் துருப்புக்களைக் கடுமையாகத் தாக்கின போரின் முதல் மூன்று நாட்களும் எகிப்து இஸ்ரேலியப் படைகளை சுயஸ் பகுதியின் கிழக்கு கரையிலிருந்தும், சினாய் பகுதியிலிருந்தும் விரட்டியடித்தது. சிரியாவின் கோலான் மலைப் பகுதியில் நடைபெற்ற போரிலும் எகிப்து படைகளின் கை ஓங்கியிருந்தன. மூன்று நாட்களிலும் இஸ்ரேலின் கவசப் படையின் மூன்றில் ஒரு பகுதியான 650 டாங்கிகள் அழிந்தன. இஸ்ரேலின் விமானப் படை விமானங்கள் எகிப்துக்கு சோவியத்யூனியன் வழங்கியிருந்த ஏவுகணையான சாம்-6க்கு இரையாகின. இஸ்ரேலின் 500 குண்டுவீச்சு விமானங்களில் 100 அழிக்கப்பட்டன அல்லது சேதமாக்கப்பட்டன. இந்நிலையில் அப்போதைய இஸ்ரேலிய பிரதமர் பெண்மணி கோல்டா மேயர் அமெரிக்காவின் உதவியை நாடினார் ஏற்கனவே அரபுலகிற்கு சோவியத்தின் உதவியை அறிந்து தருணம் பார்த்திருந்த அமெரிக்காவிற்கு இஸ்ரேலின் அபயக்குரல் வாய்ப்பாக அமைந்தது. அமெரிக்காவின் பிரமாண்டமான இராணுவ சரக்குவிமானங்களான சார்ளி 114விமானங்கள்மூலம் அமெரிக்க ஆயுத உதவி இஸ்ரேலுக்கு வழங்கப்பட்டது. அமெரிக்க இராணுவ உதவியை அவசரமாகப் பெறும் பொருட்டு இஸ்ரேலின் பயணிகள் விமான சேவையான 'எல்-அல்' விமானங்களின் பயணிகள் இருக்கைகள் அகற்றப்பட்டு அவற்றில் இராணுவ தளபாடங்கள் ஏற்றப்பட்டன. 145 பறப்புகளில் 10,800 தொன் இராணுவ உபகரணங்கள் இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவ் வந்தடைந்தன (இவற்றில் 50 தொன் டாங்கிகள் 30 தொன் தானியங்கி பீரங்கிகள். 25 தொன் ஆட்லறிகள் அடங்கும்).

இந்த உதவியை தொடர்ந்து அடுத்த மூன்று நாட்களிலும் இஸ்ரேல் எகிப்திய துருப்புக்கள் மீது பதிலடியை ஆரம்பித்தது. காஸா பகுதியையும், சினாய் பகுதியையும் மீள இஸ்ரேல் ஆக்கிரமித்தது. கோலான் குன்றுகளில் மீண்டும் இஸ்ரேலிய கவசவண்டிகள் எதிர்ப்பு இன்றி ஏறின.

இஸ்ரேல் தனது இரண்டாவது ஆறுநாள் போரில் தான் ஆக்கிரமித்த பகுதியை மீண்டும் தக்க வைத்துக்கொண்டது.

★ ★

### படைநகர்த்தலல்ல அகதிநகர்த்தல:

இஸ்ரேல் கடந்தமாத இறுதியில் தென்லெபனானில்மேற்கொண்ட ஒரு வாரகாலத் தாக்குதலோடு இதுவரை அது மூன்று தடவைகள் எதிரியுடன் ஒருவாரகாலப் போர்களை நடத்தி முடித்திருக்கின்றது. ஆனால் முதல் இரு ஒருவாரப் போர்கள் போலன்றி இம்முறை இஸ்ரேல் எதிரியுடன் நேரடியாகமோதாமல் போரில் சம்பந்தப்படாத மக்களுடன் ஒரு வாரமாக போரிட்டிருக்கின்றது. அதாவது சுருங்கக்கூறின் முதல் இரு முறையும் இஸ்ரேல் தனது படை நகர்த்தல் மூலம் தன்னைக் காத்துக்கொண்டது. இம்முறை அவ்வாறின்றி மக்களை அகதிகளாக நகர்த்தல் மூலம் தன்னை காக்க முனைந்துள்ளது.

## ஜனாதிபதி

யும் கலந்து ஒரு சாம்பாராக ஜே ஆர் ஜெயவர்த்தனா புதிய அரசியலமைப்பை வடிவமைத்து தானே சகல நிறைவேற்று அதிகாரங்களையும் கொண்ட ஜனாதிபதியாகிக் கொண்டார். காலிமுகத்திடலில் இருந்த பாராளுமன்றக் கட்டிடம் ஜனாதிபதி செயலகமாக உருமாற பாராளுமன்றம் கோட்டேக்கு இடம் மாறியது உலகின் எந்த நாட்டு அதிபருக்கும் இல்லாத வானளாவிய அதிகாரங்களுடன் சிங்கள மக்களின் தலைவராக ஜே. ஆர். ஜெயவர்த்தனா மாறினார்.

பதினைந்துஆண்டுகால ஆட்சியின் பின்னர் இப்போது இந்த அரசியலமைப்பு கேள்விக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது எனினும் இந்த அரசியலமைப்பாயினும்சரி, இதற்கு முந்திய அரசியலமைப்புகளாயினும் சரி நாட்டின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கத் தவறிவிட்டன என்பதும், பௌத்த சிங்கள மேலாண்மைப் போக்கை தீவிரப் படுத்துவதிலேயே அவை நாட்டம் கொண்டிருந்தன என்பதும் இங்கு சுட்டிக்காட்டத் தக்கதேயாகும்.

### பழைய அரசியலமைப்புகள்

ஆங்கிலேயர் ஆதிக்கம் தீவிலிருந்து அகன்றபோது சோல்பரி அரசியலமைப்பு அறிமுகமாக்கப்பட்டிருந்தது. மக்கள்பிரதிநிதிகள் சபை, செனட் சபை என்று இரு சபைகளும் பிரித்தானிய அரசின் பிரதிநிதியாகநியமனம் பெறும் மகாதேசாதிபதியும் செயற்பட்டு நாடு ஆளப்பட்டு வந்தது. இந்த அரசியலமைப்பு காலத்துக்குக்காலம் திருத்தங்களுக்கு உள்ளான போதும் 1971வரை அடிப்படை மாற்றங்கள் எதையும் காணவில்லை 1948 பெப்ரவரி 4முதல் அமுலில் இருந்து வந்த சோல்பரி அரசியலமைப்பின் ஆட்சி 1972 மே 21 உடன் முடிவுக்கு வந்தது.

மகாராணியின் பெயரால் நடத்தப்பட்டு வந்த ஆட்சிக்குப் பதிலாக இலங்கை மக்களின் பெயரால் நடத்தப்படும் ஆட்சி அரங்கேறியது. இலங்கைத் தீவின் தேசிய சிறுபான்மை இனங்களுக்கு சோல்பரி அரசியல் அமைப்பின் 29-வது சரத்து மூலம் வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு நீக்கப்பட்டதோடு, தீவுக்குள் தமக்கு அநீதி இழைக்கப்படுவது குறித்து பிரிவி கவுன்சிலுக்கு முறையிடும் உரிமையும் மறுக்கப்பட்டது. மகா தேசாதிபதி என்னும் ஆட்சித் தலைவரின் பதவிப் பெயர் ஜனாதிபதி என்று மாறியதோடு பாராளுமன்றமும் தேசிய அரசுப் பேரவையாக மாறியது. செனட் சபையும் நியமனங்கள் மூலம் உறுப்பினர்கள் உருவாக்கப்படுவதும் இல்லா தொழிக்கப்பட்டது. இலங்கை என்பதும் சிறிலங்கா சோசலிச ஜனநாயகக் குடியரசு என்று அறிவிக்கப்பட்டதோடு பௌத்தமும், சிங்களமும் அரியணை ஏறிக்கொண்டன.

இந் நிலையில்தான் 1972 மே 22முதல் அமுலுக்கு வந்த புதிய அரசியல் அமைப்பு தமிழ் மக்களின் எதிர்ப்பைச் சம்பாதித்துக்கொண்டது. முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு இழந்த ஆட்சியுரிமையை மீளப் பெறுவது பற்றியோ அல்லது தாமே முன்மொழிந்த சமஷ்டி அல்லது கூட்டாட்சி பற்றியோ வலியுறுத்தாத அன்றைய தமிழர் பிரதிநிதிகள் வெறுமனே ஒரு ஆறம்சக் கோரிக்கையை மட்டுமே சமர்ப்பித்தனர். அரசியலமைப்பை ஆறே ஆறு அம்சங்களில் திருத்தினால் போதும். திருப்திப்பட்டுக் கொள்கின்றோம் என்று தமிழர் பிரதிநிதிகள் கெஞ்சிக் கேட்டதை பௌத்த சிங்களப் பேரினவாத அரசு கண்டு கொள்ளவே இல்லை. இந்தக் கண்மூடித்தனத்தை கண்டித்து காங்கேசன்துறை தொகுதி உறுப்பினர்பதவியை சா.ஜே.வே. செல்வநாயகம் துறந்த போதும் கூட அரசு பொருட்படுத்தவில்லை இரண்டரை ஆண்டு கழித்து நடத்தப்பட்ட இடைத்தேர்தலில் மக்கள் ஜனநாயக பூர்வமாக தமது எதிர்ப்பை வெளிக்காட்டிய போது கூட அரசாங்கம் கவனம் செலுத்தவில்லை. கசக்கப்பட்ட கடதாசிகளின் வரிசையில் ஆறம்சக் கோரிக்கையும் இடம் பிடித்துக்கொள்ள, தமிழ் மக்களும் இழந்துபோன தமது இறைமையை மீட்டுக்கொள்ள திடசங்கற்பம் பூண்டனர்.

### அக்கறையற்ற நிலையில் சிறிலங்கா

இன்றைய அரசியலமைப்பில் திருத்தம் அல்லது மாற்றம் பற்றிச் சிந்திப்போரும் கூட இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கிலிருந்து இதை அணுகுவதாகத் தெரியவில்லை. 1991இல் அன்றைய ஜனாதிபதி பிரேமதாசவுக்கு எதிராக கொண்டு வரப்பட்ட அரசியல் குற்ற விசாரணை கோரும் பிரேரணை தாக்கல் செய்யப்பட்டது முதல் அரசியலமைப்பு குறித்த சர்ச்சைகள் உருவாகின ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்த வேண்டும்; நாட்டின் அதி உயர் சட்டவாக்க சபையாக பாராளுமன்றம் மாற்றப்பட வேண்டும்; விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தை அறிமுகப் படுத்திய தேர்தல் முறையிலும், விருப்புவாக்கு அளிக்கும் முறையிலும் திருத்தங்கள் வேண்டும் என்பன போன்றதான அம்சங்களே அரசியலமைப்பு நிபுணர்களின் ஆராய்ச்சிக்கு உரியவைகளாகியுள்ளன. இன்னும் மாகாண சபை அமைப்பை நீக்குவதுபற்றியும், பாராளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கை பற்றியும் அதிகம் அக்கறை காட்டும் தென்னிலங்கையின் புத்திஜீவிகள் நாட்டின் அடிப்படைப் பிரச்சினையாகி- அனைத்து விவகாரங்களிலும் ஊடுருவி நிற்கும் இனப் பிரச்சினைக்கு ஏற்புடையதான தீர்வுகாணும் நோக்கில் அரசியலமைப்பை புதுக்குவது பற்றி சிந்திப்பதாகத் தானும் அறியமுடியவில்லை. அதாவது சுருக்கமாகக் கூறின் தென்னிலங்கையின் அரசியல்வாதிகள் தமது அதிகாரப் போட்டிக்கும் - பதவி ஆசைக்கும் - முன்னுரிமை அளிக்கின்றனரே தவிர நாட்டு நலனில் அக்கறை கொண்டுசெயற்படுவதாக எண்ண முடியவில்லை.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணவென நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு "ஆண்டிகள் கட்டிய மடம் போல" உருவிழந்து போகும் இன்றைய நிலையில் மற்றுமொரு பாராளுமன்றத் தெரிவுக்குழு உருவாக்கப்படவுள்ளது. இது இனப்பிரச்சினைக்கான தீர்வை விடவும், அக்கறைக்குரிய விடயங்கள் பல சிறிலங்காவிற்கு இருப்பதனையே எடுத்துக் காட்டுகின்றது.


## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



### லெப்டினன்ட் பானு

(திருச்செல்வம் தெம்சிக்குமார் சங்கர்)

முல்லைத்தீவு

தாயின் மடியில்: 15-07-197[illegible]

தாயக மண்ணில்: 06-08-1991

வன்னி மண்ணிலே......
கயவனின் காலடி கன்னித்தமிழை
தொட்டிட விட்டிடுவானோ—இந்த
வன்னி மறவன் பானு
சினங்கொண்டு இவன சீறியதாலே
சிதறியதே மாற்றானின் மார்புகள்
பானுக்குட்டி!
உன் இழப்பாலும் உறுதியாக
நிமிர்கிறோம் — எம் தலைவர் இருக்கிறார்
என்பதால்

(இவருடன் வீரச்சாவு அடைந்த லெப். கீரன் அவருக்கும் எமது நினைவஞ்சலிகள்.)

உங்கள் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கும்
மாமா குடும்பத்தினர்

பானஷூர்,
யாழ்ப்பாணம். (சி-7146)



## [illegible]ராண்டு நினைவலைகள்



மாதகலில்
மைந்தனாக:
28-04-1978

வெற்றிலைக்கேணியில்
மாவீரனாக:
30-07-1991

### வீரவேங்கை கம்பன்/சக்தி

[நா. கனகராசா சத்தியகுமார்]

காஞ்சிபுரம், மாதகல்.

உன் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்
அப்பா, அம்மா, சகோதரர்கள்,
மற்றும் உறவினர்கள், நண்பர்கள்.

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை. (சி-7140)

# மண்கிண்டி இராணுவ முகாம் தகர்ப்பு; பேரதிர்ச்சி அளித்த ஒரு தாக்குதல்

"மண்கிண்டி மலை இராணுவமுகாம் மீதான தாக்குதலில் இராணுவத்தினர் அதிர்ச்சி அடைந்துள்ளனர். கனிஷ்ட நிலை அதிகாரிகள் கோபம் கொண்டுள்ளனர். யுத்தம் விரைவில் முடிவிற்குக் கொண்டு வரப்படவேண்டும் என்பதுதான் அவர்களின் இன்றைய அரசியற்தேவையாக உள்ளது. யுத்தத்தைப் பற்றி ஆட்சிபீடத்தில் உள்ளவர்களின் அர்த்தமற்ற போக்கு அவர்களை விரக்தி நிலைக்குத் தள்ளியுள்ளது"

இவ்வாறு மணலாறு - மண்கிண்டிமலை இராணுவ முகாம் மீதான புலிகளின் வெற்றிகரத் தாக்குதலினால் இராணுவத்தினருக்கு ஏற்பட்டுள்ளயனஉளைச்சலைசண்டே ரைம்ஸ் குறிப்பிடுகிறது

இராணுவத் தரப்பிற்கு இந்தளவிற்கு வெறுப்பையும், விரக்தியையும் ஏற்படுத்தும் அளவிற்கு மண்கிண்டிமலை இராணுவ முகாம் தாக்குதல் அமைந்த இராணுவத் தரப்பின் கணிப்பீட்டின்படி கடந்த பத்தாண்டுகளில் இராணுவம் இதைப்போன்றதொரு இழப்பை ஒரு தாக்குதலின் போதும் சந்திக்கவில்லை எனக் கூறப்படுகின்றது. இதற்கு விடுதலைப் புலிகள் இதுவரை தாக்கிஅழித்த முகாம்களில் இம்முகாம் பெரிதாக இருந்ததோடு, ஏற்பட்ட உயிர், மற்றும் தளபாட இழப்புக்களும் அதிகமாக இருந்தமையே காரணமாகும்.

இந் நிலையில் வெறுப்பின் விளிம்பிற்கே சென்ற இராணுவ அதிகாரி ஒருவர், "நமது பாதுகாப்பு பஜெட்டைத்தயாரிக்கும் போது எதிரியின் திறமையை அதிகரிக்கும் திட்டத்திற்கு, எம்மை அறியாமலே நிதியை உதவுகிறோம் போல், தெரிகின்றது" எனத் தெரிவித்துள்ளார்.

இராணுவ முகாம்களை அதிரடி நடவடிக்கையின் மூலம் தாக்கி அழிக்கும் விடுதலைப் புலிகளின் இப்போர்த் தந்திரோபாயமானது, 1991ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் தலைவர் பிரபாகரன் வகுத்த போர் முறைத்திட்டத்தின் தர்க்கபூர்வ வளர்ச்சியாகும். இப்போர் முறையானது கெரில்லாப் போர் முறையின் உயர் நிலை வடிவத்தைக் குறிப்பதாகும்.

1991ஆம் ஆண்டு, ஆனையிறவுப் பெரும் சமரிலும், மணலாற்றுப் போரிலும் ஏற்பட்ட அனுபவங்களைக் கொண்டு வகுக்கப்பட்ட புதிய போர் முறைத்திட்டமானது சிறிலங்கா இராணுவத்திற்குப் பெரும் பின்னடைவுகளையும், இழப்புக்களையும் ஏற்படுத்தியது.

1992ஆம் ஆண்டில் புலிகளின் மின்வேக அதிரடித் தாக்குதலானது இராணுவத்திற்குப் பெரும் இழப்பை ஏற்படுத்தியது. ஆயிரக்கணக்கில் இராணுவத்தினர் கொல்லப்பட்டனர், ஆயிரக்கணக்கில் அங்கவீனராயினர், பல்லாயிரக்கணக்கானோர் இராணுவத்தைவிட்டு ஓடிவிட்டனர், பெருந்தொகை இராணுவ தளபாடங்களை இராணுவம் இழந்தது அல்லது விடுதலைப் புலிகளிடம் பறிகொடுத்தது.

ஆனையிறவு மணலாற்றுப் போர்களின்பின் யாழ்ப்பாணம் மீதான பாரிய திட்டத்துடன் தயாரான இராணுவத்தின் போர் முறை திட்டங்கள் முயற்சிகள் என்பனவற்றை புலிகளின் புதிய போர்முறைத் திட்டம்முறியடித்தது.

தலைவர் பிரபாகரன் வகுத்துக் கொண்ட இப்போர் முறைத் திட்டமானது எதிரியின் நடவடிக்கைகளையும், பலத்தையும் சரியாககணிப்பீடு செய்து மிகவும் நுட்பமாகத் தயாரிக்கப்பட்டதாகும்.

இப்புதிய போர்முறைத் திட்டத்தில் ஆரம்ப நடவடிக்கைகளின்போது ராணுவ ரோந்து அணிகள் முன்னணிக் காவல் நிலைகள், இராணுவ தொடர் வேலிகள் என்பனவற்றின் மீது மேற் கொள்ளப்பட்ட மின்னல் வேக அதிரடித்தாக்குதல்களில் இராணுவத்தினர் சிக்கித் திணறினர். இறுதியில் அராலியில் இடம் பெற்ற கண்ணி வெடித் தாக்குதல் வடபகுதி இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ உட்பட ஒன்பது உயர் அதிகாரிகள் கொல்லப்பட்ட சம்பவமானது யாழ்ப்பாணம் மீதான தாக்குதல் திட்டத்தையே காலவரையறையின்றிப் பின்தள்ளியது.

மறுவளமாக புலிகளின் இப்போர் முறைத்திட்டமானது தர்க்கபூர்வ வளர்ச்சிகண்டது காவலரணகள் முன்னணி நிலைகள் என்பனவற்றில் இருந்து இராணுவ முகாம்களைத் தாக்கி அழிக்கும் நிலைக்கு வளர்ச்சி கண்டது. இந்த வரிசையில் வண்ணான்குளம் ராணுவமுகாம் (17-07-1992) கட்டைக்காட்டு இராணுவ முகாம் (1-10-1992) மண்கிண்டி மலை இராணுவ முகாம் (25.07.1993) என்பன அழிக்கப்பட்டமை இதனை வெளிப்படுத்தும் அம்சங்களாகும்.

இத்தாக்குதல்கள் மூன்றும் இராணுவத்திற்கு பெரும் உயிரிழப்பையும் இராணுவ தளபாட இழப்புக்களையும் ஏற்படுத்தின. வண்ணான்குளத் தாக்குதலில் ராணுவம் 60ற்கு மேற்பட்டோரை இழந்ததோடு நூற்றிற்கும் மேற்பட்ட துப்பாக்கிகளையும், பல ஆயிரக் கணக்கான ரவைகளையும் இழந்தது.

இதேபோன்று கட்டைக்காட்டு மீதான தாக்குதலும் 5 கோடி ரூபாவிற்கும் மேற்பட்ட யுத்த தளபாடங்களை விடுதலைப்புலிகளுக்கு வழங்கியவேளை 30க்கும் மேற்பட்ட இராணுவத்தினரையும் பலி கொண்டது, இத் தாக்குதலில் 180 எப். என் .சி ரக தானியங்கித் துப்பாக்கிகளையும் சுமார் 3 லட்சம் வரையிலான பல ரக ரவைகளையும் புலிகள் கைப்பற்றினர்.

இறுதியாக மண்கிண்டிமலை முகாம் மீதான தாக்குதலிலும் சுமார் 5கோடி ரூபா பெறுமதியான ஆயுத தளபாடங்கள் புலிகளுக்கு கிடைத்ததோடு 75க்கும் அதிகமான இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

இம் முகாம் மீதான தாக்குதலில் ஆர். பி. ஜி, மோட்டார் போன்ற ஆயுதங்கள் ஏனைய தாக்குதல்களை விட அதிகம் கிடைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இரண்டாம் கட்ட ஈழப் போரில் வண்ணான்குளம், கட்டைக்காடு, மண்கிண்டிமலை, ஆகிய இராணுவ முகாம்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றுவதற்குமுன்னரே பல இராணுவ முகாம்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றியுள்ளனர். இந்த வரிசையில் கொக்காவில், கோட்டை, மாங்குளம் என்பன அடங்குகின்றன.

ஆனால், கொக்காவில், கோட்டை, மாங்குளம் ஆகிய முகாம்கள் மீதான தாக்குதலும், தாக்குதல் சூழ்நிலையும், வண்ணான்குளம், கட்டைக்காடு, மண்கிண்டி மலைஇராணுவ முகாம்கள் மீதான தாக்குதலும், தாக்குதல் சூழ்நிலையும் முற்றிலும் வேறுபட்டவையாகும். மேலே குறிப்பிட்ட மூன்று முகாம்களும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் முற்றுகைக்குள் இருந்த வேளையில் கைப்பற்றப்பட்டவையாகும். ஆகையினால், ஓரளவு மரபுவழி தாக்குதல் முறையும் இத் தாக்குதலின்போது பேணப்பட்டதாக இருந்தது. தாக்குதல்களும் ஒரிரு நாள்கள் நீண்டதாகவும் இருந்தன.

ஆனால், வண்ணான்குளம், கட்டைக்காடு, மண்கிண்டி மலை இராணுவமுகாம்கள் மீதான தாக்குதல் சூழ்நிலை மாறுபட்டதாகும். சிறிலங்கா இராணுவத்தின் தொடர் நிலைகளை ஊடறுத்து தாக்கி அழிக்கும் ஒரு நடவடிக்கையாகவே இவை இருந்தன. அதே வேளை தாக்குதல்கள் அதிரடியாகவும், ஒரிரு மணித்தியாலத்திற்குள் தாக்குதல்கள் முடிக்க வேண்டியவையாகவும் இருந்தன.

ஆயினும், இத் தாக்குதல் முறை ஒப்பீட்டு ரீதியாக முன்னைய தாக்குதல்களை விட எதிரிக்கு இழப்புகள் அதிகமாகவும் புலிகளுக்கு இழப்புகள் குறைவாகவும் இருந்தன. ஆனால் இத் தாக்குதல்களானது, வடக்கில் தளங்களாக விஸ்தரிக்கப்படாத இராணுவ முகாம்களை விடுதலைப் புலிகள் அதிரடி மூலம் அழிக்கும் சக்தியை பெற்றுள்ளமையானது வெளிக்காட்டப்பட்டுள்ளது. அத்தோடு புலிகளின் துல்லியமான தாக்குதல் திறனையும், வேகத்தையும் இத் தாக்குதல்கள் வெளிக்காட்டியுள்ளன.

இந் நிலையில் இன்று சிறிலங்கா இராணுவ தரப்பின் போர் யுத்தியில எழுந்துள்ள பிரச்சினையானது தமிழர் தாயகப் பகுதியில் குறிப்பாக வடக்கு - கிழக்கை துண்டாடவும், வடக்கின் பிரதான நிலப்பரப்பில் இருந்து குடாநாட்டின் தரை வழிப்பாதையைத் துண்டாட அமைக்கப்பட்டிருக்கும் இராணுவ வேலிகளுக்கும், காவரண்களுக்கும், முகாம்களினதும் பாதுகாப்பு குறித்த கேள்வியே ஆகும்.

அடுத்ததாக இராணுவத்தினரிடம் இருந்து விடுதலைப் புலிகளுக்கு 'விநியோகிக்கப்படும்' பெரும் தொகையான இராணுவத் தளபாடங்கள் போர்முறையில் ஏற்படுத்தக் கூடிய பாதிப்பு குறித்த அச்சமாகும். இது குறித்து சண்டே ரைம்ஸ் எழுதுகையில் "நேர் முறைத் தாக்குதலுக்கு ஆளாக வேண்டிய பயங்கர நிலை ஒரு புறமிருக்க பல கோடி ரூபா பெறுமதியான போர்க்கருவிகளை இழந்தது தான் பாதுகாப்பு வட்டாரங்களில் கவலையை ஏற்படுத்தியுள்ளது" எனத் தெரிவிக்கின்றது.

இந் நிலையில், புதிய பாதுகாப்பு யுக்திகள் வகுப்பது குறித்து பாதுகாப்பு வட்டாரங்களில் பெரும் குழப்பநிலை உருவாகியுள்ளதாக வெளிவரும் தகவல்கள் சரியானவையே. வகுக்கவேண்டிய புதிய தந்திரோபாயத்தில் சிறிலங்கா இராணுவம் தன்னையும் பாதுகாத்து ஆக்கிரமித்த நிலத்தையும் பாதுகாக்க நினைக்கின்றது. ஆனால் இதில் ஒன்றைப் பாதுகாக்க முனைந்தால் மற்றொன்றை இழந்தே ஆகவேண்டும் என்பதை விடுதலைப் புலிகள் உணர்த்தி வருகின்றனர்.

**ஜெயராஜ்**

---

## சாயிபாபா

"பக்தர்களின் சொத்து பக்தர்களுக்கே சொந்தம்" என்கிறது சாயிபாபாஅறக்கட்டளை ஆனால் சாயிபாபாவின் தம்பி ஜானகிராமையா பாபாவிற்கு பிறகு சொத்துக்கள் எல்லாம் தனக்கு சேர வேண்டும் என்பதில் பிடியாகவுள்ளார். இதனால் அறக்கட்டளைத் தலைவராகத்தானே வரவேண்டும் என்பதில் முனைப்பாகவுள்ளார் எனவும் கூறபபடுகிறது.

சாயிபாபா கொலை முயற்சியின் பின்னணியில் மேலும் பல காரணங்கள் தெரிவ்ககப் படுகின்றன. இது உள்வீட்டுப பிரசசினைதான் எனவலியுறுத்துமாப்போல் ஆச்சிரம நிர்வாகத்தின் மீது அதிருப்தி கொண்டவர்களின செயலே இதுவென ஆந்திர உள்துறை அமைச்சர் சென்னாரெட்டி தெரிவிததுள்ளார். மேலும் இக்கொலைக்கும் நக்சலைட்டுகளுக்கும் தொடர்பு இருக்காது என்பதே இவரது நம்பிக்கையாக உள்ளது.

மேலும் சாயிபாபாவின் "ஆனமீக சாம்ராஜ்யத்தை" உடைத்தெறிய அவர் மீது அவதூறு சுமத்த வடஇந்திய போலி ஆன்மீகத் தலைவர்களின் செயலாக இது இருக்கலாம் எனவும் காரணம் கூறப்படுகிறது.

இதேவேளை அரசியல் ரீதியாகவும் இக்கொலை முயற்சிக்கு சிலர் காரணங்களை முன்வைக்கின்றனர். இந்திய அரசியலின உணர்ச்சி பூர்வமான பிரச்சினையாக விளங்குகின்ற பாபர்மசூதி இடிப்பு தொடர்பாக பாபா வெளியிட்ட சில கருத்துக்கள் பாரதீயஜனதாக் கட்சி, விஸ்வ இந்து பரிசத் ஆகியவற்றை ஆத்திரமுறச் செய்திருந்தன. இதனால் இவர்கள் பாபாவைக் கொலை செய்ய சதித்திட்டம் வகுத்திருக்கலாம் என சிலர் சந்தேகம் தெரிவிக்கின்றனர். ஆனால் இக்குற்றச்சாட்டுக்களை இவ்விரு அரசியல் கட்சிகளும் வன்மையாக மறுத்துள்ளன.

அத்துடன் பம்பாயையும் இந்தியாவையும் ஒரு கலக்குக் கலக்கிய தாவூத் இப்பிராகிமின ஆட்கள் இதில் சம்பந்தப்பட்டுள்ளார்களா? எனவும் சந்தேகிக்கப்படுகிறது. இதற்கு ஆதாரமாக கொலை செய்ய முயற்சித்தவர்களின் இருப்பிடங்களில கண்டுபிடிக்கப்பட்ட வெடிப்பொருள்கள் சுட்டிக்காட்டப்படுகின்றன.

இந்தியாவின் பல நகரங்களிலும பம்பாயில் இடம் பெற்றது போன்ற தொடர் குண்டு வெடிப்புகளை ஏற்படுத்த தாவூத்இப்ராகிமின் ஆட்கள் திட்டமிட்டுள்ளதாக இந்திய புலனாய்வுத் துறையினர் எச்சரிக்கை செய்துள்ள நிலையில் இந்திய ஜனாதிபதி முதல் பல பிரமுகர்களும், முக்கியஸ்தர்களும், பெருமளவு பக்தர்களும் வந்து போகும் சாயிபாபாவின் ஆச்சிரமத்தில் குண்டுகளை வெடிக்க வைப்பதன் மூலம் பெரும் பீதியைஏற்படுத்தஇவர்கள் திட்டமிட்டிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது

இவ்வாறு பல ஊகங்கள் சந்தேகங்கள் வந்துள்ள இவ்வேளையில் உண்மையில் நடந்தது என்ன? என்பது சாயிபாபாவிற்குத் தெரியும் என உறுதியாக நம்பப்படுகிறது, ஆனால் இவரின் மௌனத்திற்குக் காரணம் என்ன? இவரது மௌனம் கலையுமா? என கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

---

## உறவினர்களின்

காலப்பகுதியில் தாம் அனைவரும்மிக மோசமாகப் பாதிக்கப்பட்டதாகவும் அமது உடல் உறுப்புக்கள் அனைத்தும் சோர்வடைந்தும் நடுக்கமுற்றும் காணப்பட்டது என்றும் ஒருபுறம் குமட்டலும், வாந்தியுமாக இருந்ததாகவும் கூறினர். ஒருகட்டத்தில் மயக்கமுற்று எமது உடல்நிலை குறித்து நாமே புரிந்து கொள்ள முடியாதநிலை தோன்றியது. இந்தக் கட்டத்திலேயே நாம் மரணத்தின் எல்லைக்குச் சென்றதாக உணர்ந்து கொண்டோம் என்று கூறினர்.

எமக்கு ஏற்பட்ட இந்த நிலையை அவதானித்த எமது உறவினர் ஓலமிட்டு அழுதனர் எமது கண் முன்னாலேயே பலர் மயக்கமுற்று விழுந்தனர் மயக்க முற்றவர்களை அவசர அவசரமாக வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லும் வாகனங்களின் ஓசையும் வயிற்றை ஒரு கையினாலும் தலையை ஒரு கையினாலும் அமர்த்திப் பிடித்துக் கொண்டு முணுகல் குரலில் தமது உறவினருடன்உரையாடும் முணுகல் ஓசையும், உறவினரின் அவலக் குரல்களும் எமக்கு மரணம் சம்பவிக்கப்போவதை ஞாபகப் படுத்திக் கொண்டிருந்தது என்றும் கைதிகள் தெரிவித்தனர்.

நேற்று நண்பகலளவில் கூட்டுப்படைத் தளகர்த்தர் திரு. ஹமில்டன் வணசிங்கா வினது தகவல் எமக்கு கிடைத்த பின்னரே நாம் நீராகாரம் அருந்த ஆரம்பித்தோம். என்றும் கைதிகள் தெரிவித்தனர்.

(க),(நி)

---

## கிளாலி

சம்பவம் நடைபெற்ற தினத்தன்று கடற்படையினர் கைது செய்தவர்களையும் காயமடைந்த இருவரையும் காரைநகர் கடற்படை முகாமிற்கு கொண்டுசென்றனர் பின்னர் பலாலி முகாமிற்கு கொண்டு சென்று அங்கிருந்து படுகாயமடைந்த இருவரையும்விமான மூலம் அனுராதபுரம் அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சைக்கென அனுமதித்துள்ளதாக தெரியவருகின்றது.

மேலும் சிறிலங்கா கடற்படையினரினால் கைது செய்யப்பட்டவர்கள் காரை நகர் அல்லது பலாலி படைமுகாமில் தடுத்துவைக்கப்பட்டிருக்கலாம் என தெரியவருகின்றது. (நி), (பா)

# ஜனகபுர முகாம் தகர்ப்பு அரசுக்கான எச்சரிக்கை

## ஜலண்ட் பத்திரிகை தெரிவிப்பு

[கொழும்பு]

மணலாறு ஜனகபுர இராணுவ முகாம் மீது புலிகள் நடத்திய வெற்றிகரமான தாக்குதல் இராணுவ பாதுகாப்பு அமைப்பு முழுவதையும் அதிர்ச்சிக்குள்ளாகி இருப்பதாக ஜலண்ட் பத்திரிகை எழுத்தாளர் சார்மின்டா பெர்னான்டோ தெரிவித்துள்ளார். சென்ற ஜூலை மாதம் இந்த வருடத்தின் மிகக் கொடூரமான ரத்தம் தோய்ந்த மாதமென்று ஒரு சிரேஷ்ட இராணுவ அதிகாரியை மேற்கோள் காட்டி அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எழுவான்குளம் மற்றும் ஜனகபுர இராணுவ முகாம்கள் மீது புலிகள் மேற்கொண்ட மிக வெற்றிகரமான தாக்குதல், இராணுவத்தின் யுத்த தந்திரம் மிக்க கவலைக்கிடமான நிலையில் உள்ளதைக் காட்டுகிறது என்றும்.

புலிகளை வெற்றிகொள்வதற்கான மனோதிடம் அரசிடம் இல்லை என்பதையே இந்தச் சம்பவங்கள் நிரூபிக்கின்றன என்று இராணுவ ஆய்வாளர்களை மேற்கோள் காட்டி சார்மின்டா பெர்னான்டோ எழுதியுள்ளார்.

நாசம் விளைவித்த இந்த ஜனகபுர இராணுவ முகாம் தாக்குதல் அரசுக்கு ஓர் எச்சரிக்கையாகும். அரசியல் தலைவர்கள் பயன் அளிக்கக்கூடிய நடவடிக்கையை மேற்கொள்ளாவிட்டால் அதன் பலாபலன்களை இராணுவமே அனுபவிக்கவேண்டும் என்றும் எழுதும் அவர், விவசாயிகளைப் பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்ட முகாம்கள் மீது கடந்த மூன்று வருட காலப்பகுதியில் புலிகள் நடத்திய தாக்குதலில் ஜனகபுர இராணுவ முகாம் தாக்குதலே மிகப் பயங்கரமான தாக்குதல் என்று இராணுவ அதிகாரி ஒருவர் வர்ணித்ததாகக் கூறுகிறார்.

ஆளும்கட்சி புலிகளை இராணுவ ரீதியாக நசுக்குவதாக இருந்தால் ஜனகபுரத் தாக்குதல் விஜேதுங்கா அரசுக்கு ஓர் எச்சரிக்கையாக அமைகிறது. விஜேதுங்கா நிர்வாகம் அதன் யுத்த தந்திரோபாயத்தை மாற்றிக்கொள்வதற்கு இதுவே தகுந்த தருணமாகும் என்று பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டுகிறார். யுத்தம் தொடர்பாக மாற்று அணுகுமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று மேலும் ஒரு சிரேஷ்ட இராணுவ அதிகாரி கூறுவதாக அவர் எழுதுகிறார்

புலிகள் ஜனகபுர முகாம் மீது அதிரடித் தாக்குதல் மேற்கொண்டபின் புலிகள் முகாம் பகுதியிலிருந்து திரும்பிய வேகம் அவர்கள் திறமையையே காட்டுகிறது என்று ஓர் இராணுவ அதிகாரி கூறுகிறார். கடந்த வருடம் ஜூலை 11 ஆம் திகதி கட்டுபொத்த இராணுவ முகாம் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதல் சம்பவத்துக்குப் பிறகு புலிகளால் மேற்கொண்ட மிகப் பெரிய தாக்குதல் இதுவாகும். கட்டுபொத்த தாக்குதலிலும் 52 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இவ்வாறு சார்மின்டா பெர்னான்டோ மேலும் குறிப்பிடுகிறார்.


## யாழ் நகர் ஸ்ரீதர் திரையரங்கில்

(கரும்புலிகள் நினைவாக)
போராளிக் கலைஞர்கள் ஒருங்கிணைந்து
விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகம்
தயாரித்து வழங்கும்

### "தாயக கனவு"

தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10.30 மணி,
மாலை 4.00 மணி, 6.00 மணி (சி69 59


## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 04-04-1968

வீரச்சாவு: 06-08-1991

### வீரவேங்கை பூர்ணிமா

(பேரம்பலம் வசந்தி)

ஆனையிறவுப் போரினிலே
ஆகுதியாகி எம்மைக்
கலங்க வைத்த வேங்கையே! பூர்ணிமா
ஆண்டுகள் எத்தனை சென்றாலும்
மறப்போமா உன்னை!

உன் நினைவில் என்றும்
கலங்கி நிற்கும்,
தாய், சகோதரர்கள்

இல. 10, 3-ம் குறுக்குத்தெரு,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

(சி-7150)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஆகஸ்ட்மாதம் 06-ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

# காங்கிரஸ் - அ.தி.மு.க. கடும்மோதல்; பலர் கைது

சிதம்பரனார் மாவட்டத்தில் அ.தி.மு.க தொண்டர்களுக்கும் காங்கிரஸ் கட்சி தொண்டர்களுக்கும் இடையில் நேற்று கடும் மோதல்கள் நடைபெற்றன. காங்கிரஸ் தொண்டர்கள் குடிநீர் தட்டுப்பாட்டை எதிர்த்து வீதி மறியலில் ஈடுபட்டிருந்தபோது அ.தி.மு.க.வினர் அவர்களுக்கு கறுப்புக்கொடி காட்டினர். இதன்போதே இரு தரப்பிற்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டது கல்வீச்சும் இடம் பெற்றது.

இது தொடர்பாக இரு கட்சிகளினதும் நூற்றுக்கணக்கான தொண்டர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்

## மாணவர் அமைப்பு சந்திப்பு

இன்று பிற்பகல் 4.30 க்கு யா / இந்துமகளிர் கல்லூரியில் யாழ் கல்விக்கோட்ட மாணவர் அமைப்பு உறுப்பினர்களுக்கான சந்திப்பு நடைபெறவுள்ளது. இக்கூட்டத்திற்கு சகல மாணவர் அமைப்பு உறுப்பினர்களையும் வருகை தருமாறு விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு யாழ். கோட்டப் பொறுப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## உண்ணாவிரதத்தை

மாநாட்டில் பேசிய ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் போர்க் கைதிகளை விடுவிப்பது தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவை சங்கம் மற்றும் யாழ். அரச அதிபர் போன்ற இயலக்கூடிய சகல வழிகள் மூலமாகவும் பாதுகாப்பு அமைச்சு முயற்சிகள் எடுத்து வருவதாக குறிப்பிட்டார். எனினும் இவை எத்தகைய முயற்சிகள் என்பதை அவ கூறவில்லை.

## விளையாட்டு

வில்லை யென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்கள் இறக்கப்பட்ட பின் பட்டியலின் படி பார்த்தபோது பட்டியலில் இடம்பெற்றிருந்த இந்த பெறுமதி மிக்க உபகரணங்கள் இறக்கப்பட்ட பொருள்களுள் இல்லாதிருந்தது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## செஞ்சிலுவை

உயிருக்கும் ஆபத்து ஏற்படுமானால் கொழும்பிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் முன்பாக தீக்குளித்து தற்கொலை செய்யப்போவதாக பெற்றோர்கள் எச்சரித்துள்ளதாக கொழும்பிலிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

## அதிகாரிகள்

அதிகாலையும் தாக்குதல்கள் நடைபெற்றதாகவும் இதில் பொலிஸ் தரப்பில் சேதம் எதுவும் ஏற்படவில்லை என்றும் கூட்டுப்படைத் தலைமையகம் தெரிவித்தது.

# கதிர்காம விபத்தில் 6 யாழ் வாசிகள் படுகாயம்

கதிர்காமம் ஆலயத்திலிருந்து கடந்த முதலாம் திகதி செல்லக்கதிர்காமம் சென்ற வாகனம் ஒன்று விபத்துக்குள்ளாகியதில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆறு பேர் படுகாயமடைந்தனர். இவர்கள் கொழும்பு ஜோன்ஸ் வீதியில் தற்போது வசித்து வருபவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பிரேமநாத் (21), உதயராணி (34), கமலாம்பிகை (30), சந்திரன் (25), பாக்கியம் (55), பார்த்தசாரதி (43) ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர் இவர்களில் பிரேம்நாத், உதயராணி ஆகியோரின் நிலை ஆபத்தாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# போரிற்கு 2,500 கோடி மீண்டும் ஒதுக்கும் நிலை

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு போரிற்காக அரசு 2,500 கோடி இலங்கை ரூபாவை ஒவ்வொரு வருடமும் செலவு செய்கின்றது. அதேசமயம் போர் உடனடியாக முடிவுக்கு வரக்கூடிய அறிகுறிகளை காணவில்லை. இதனால் அடுத்த வரவு செலவுத் திட்டத்தில் மேலும் 2,500 கோடி ரூபாவை அரசு ஒதுக்கவேண்டியுள்ளது என ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தெரிவித்துள்ளார். கண்டியில் ஒரு பாடசாலை பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு பேசியபோதே இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

எல்லோருமே போரை விரைவில் முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என விரும்புகின்றனர். ஆனால் குறிப்பிட்ட சில 'நபர்களால்' இது நிறைவேற முடியாமல் இருக்கின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஜே.வி.பி தொடர்பு

தென்மாகாணத்தில் கடந்த சில நாட்களாக இடம்பெற்று வரும் கொள்ளைகளுக்கும் ஜே.வி.பி. இயக்கத்தினருக்கும் இடையில் தொடர்பு இருக்கின்றனவா என்பது குறித்து விசாரணை நடத்துமாறு பொலிஸ் தலைமைப்பீடம் அப்பகுதி பொலிஸ் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

# கடற்படை படகில் ஏற்றி 2 மீனவர் தாக்கப்பட்டனர்

(வடமராட்சி)

பருத்தித்துறை முனைக் கடற்பிராந்தியத்தில் இரண்டு மீனவர்களைக் கைது செய்து சிறிலங்கா கடற்படையினர் தமது படகில் ஏற்றி நிர்வாண நிலையில் வைத்து பலமாக தாக்கப்பட்ட பின்னர் கடலில் தூக்கி வீசப்பட்டனர்.

இந்த சம்பவம் நேற்று காலை 6-30 மணிக்கு நடைபெற்றது பலாலியிலிருந்து இடம்பெயர்ந்து முனையில் தங்கிவரும் சவரிமுத்து சாண்டே (வயது 22) மொரிஸ் பிரான்சீஸ் [வயது 40] ஆகிய இருவருமே இவ்வாறு தாக்கப்பட்டனர்.

இது குறித்து மொரிஸ் பிரான்சீஸ் தெரிவிக்கும்போது கடலில் தொழிலில் ஈடுபட்டிருந்த வேளை எம்மை வளைத்துப் பிடித்த கடற்படையினர் எங்கள் இருவரையும் தமது படகில் ஏற்றி வைத்து ஆடைகளை களையுமாறு பணித்தனர்.

ஆடைகள் இன்றி எம்மை அரை மணி நேரம் பிறந்த மேனியுடன் நிற்கவைத்து உடம்பு பூராவும் கண்டபடி தாக்கினர் பின்னர் இருவரையும் தூக்கிக் கடலில் வீசிவிட்டனர். அதே வேளை எனது என்ஜினையும் சேதமாக்கியதோடு. பிடித்து வைத்திருந்த மீன்களையும் பறித்தெடுத்தனர். 'இனிமேல் கடலுக்கு வரக்கூடாதெனவும் எச்சரித்தனர் என்றார்,

நேற்று முன்தினம் இரவு மேலும் மூன்று மீனவர்கள் குடத்தனையில் வைத்து கடற்படையால் தாக்கப்பட்டனர். இவர்களது என்ஜின், எண்ணெய் பரல்களை கடற்படையினர் எடுத்துச் சென்றனர்.

(யோ)

# பழுதடைந்த உணவு உண்ட 14 பேர் ஆஸ்பத்திரியில்

(யாழ்ப்பாணம்)

பழுதடைந்த உணவினை உண்ட 14பேர் வயிற்றோட்டம் காரணமாக யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக்காலை கொத்துரொட்டியை உண்டதனாலேயே இவர்களுக்கு வயிற்றோட்டம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. வட்டுக்

## தாண்டிக்குளம்

வீதிக்கு கொண்டு செல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. பெரிய பை ஒன்றில் பல புகைப்படங்களை எடுத்துவந்த சாவகச்சேரி நபர் ஒருவரும் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு மன்னார் வீதிக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

## மேலும்

இதேவேளை கடந்த 36மணித்தியாலத்திற்குள் 16உண்ணாவிரதிகள் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (நி), (சி)

கோட்டைப் பகுதி வீடுகளில் வசித்த ராசமணி (40) பாஸ்கரன் (01) திடன் (03) கலைச்செல்வி (11), சத்தியபாமா (12), வாசுகி (19), மார்க்கண்டு (85), ராஜேஸ்வரி (41) ஆகியோரே வயிற்றோட்டத்தால் சங்கானை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பின் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டவர்களாவர்.

இதே சமயம் உடுவில் மல்வப்பகுதி அகதி முகாமில் வசிக்கும் கிறிஸ்ரபெல் (13) கியோமார் (55), நேசமலர் (18), வசந்தகுமாரி (17), தேவராசா (23), கிருஷ்ணன் (72) ஆகியோர் கொத்துரொட்டி உண்டதால் ஏற்பட்ட வயிற்றோட்டம் காரணமாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.